Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1321)


முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 மாசி 27 சனிக்கிழமை (10.03.2012) பக்கங்கள் 16 ஓசை - 161










# இலங்கையின் இறையாண்மையில் அமெரிக்கா தேவையற்ற தலையீடு

## அரசாங்கம் குற்றச்சாட்டு



(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை இலங்கையின் இறையாண்மைக்குள் தலையிடும் செயலாகவே உள்ளதென இலங்கையின் சார்பில் ஜெனிவா மாநாட்டில் கலந்து கொண்டுள்ள முன்னாள் சட்ட மா அதிபர் மொகான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பிலான தனது பிரேரணையினை, ஐ.நா. மனித உரிமைச் சபையில் முன்வைத்துள்ள அமெரிக்கா, இது தொடர்பிலான உப மாநாடொன்றினையும் நேற்று முன்தினம் ஐ.நா. மனித உரிமைச் சபையில் நடத்தியிருந்தது. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த உப மாநாட்டில் 25 வரையிலான நாடுகள் பங்கெடுத்திருக்கின்றன. தவிரவும் மனித உரிமை அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், (15 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவியை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தரம் 8 இல் கல்வி பயின்றுவரும் உரும்பிராயைச் சேர்ந்த பாடசாலை மாணவியொருவர் நேற்று முன்தினம் முதல் வீடு திரும்பவில்லை என்று கோப்பாய் பொலிஸில் குறித்த மாணவியின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

சுதன் திஸ்ஷா (வயது - 14) என்ற மாணவியே இவ்வாறு வீடு திரும்பவில்லையென பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை பாடசாலை சென்ற குறித்த மாணவி பிற்பகல் வீடு திரும்பாததையடுத்து குறித்த மாணவியின் பெற்றோர் கோப்பாய் பொலிஸில் இவ்வாறு முறைப்பாடு (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா பிரேரணை குறித்து பேச அமெரிக்க குழு புதுடில்லி விரைவு

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரும் தீர்மானம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக, அமெரிக்காவின் உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள அமெரிக்கா, அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இதுபற்றி இந்திய அரசுடன் பேச்சு நடத்தவே உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்றை அமெரிக்கா அனுப்பியுள்ளது.

இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் காலை புதுடில்லியைச் சென்றடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் அமெரிக்க அதிகாரிகள் புதுடில்லியில் யாருடன் பேச்சு நடத்தினர் என்ற விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

## ஐ.நா. மனித உரிமை அமர்வு குறித்து ஐ.தே.க. உறுப்பினர்கள் பேசத் தடை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டாமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கட்சி உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனித உரிமைப் பேரவை அமர்வுகள் தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் எவ்வித கருத்துக்களையும் வெளியிடுவது தற்போதைக்கு பொருத்தமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கமே இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கட்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு முதல் பல தடவைகள் இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித (15 ஆம் பக்கம் பார்க்க)

## இனங்களுக்கிடையிலான பிளவை ஜெனிவா பிரேரணை ஏற்படுத்தும்

### எச்சரிக்கிறார் தூதுவர் தயான் ஜயதிலக



(புதுடில்லி)

இலங்கைக்கெதிராக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணை இலங்கையிலுள்ள இனங்களுக்கிடையில் பிளவினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுவதாக பிரான்ஸிற்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக எச்சரித்துள்ளார்.

'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சமாதான உடன்படிக்கை அமுலிலிருந்த காலப்பகுதியில் இலங்கையிலிருந்த நிலைமையினை தற்போதைய நிலை ஒத்துள்ளது.

இலங்கைக்கெதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் அரசாங்கம் இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

ஜெனிவாவிற்கான இலங்கைத் தூதுவர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைப் பிரதிநிதிகள் பலர் இந்த நடவடிக்கையினை முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தோல்வியடைந்த நாடாக இலங்கையை கருதமுடியாது

### பிரிட்டன் கூறுகிறது



(கொழும்பு)

இலங்கையை தோல்வியடைந்த நாடாகக் கருத முடியாது என பிரித்தானியா அறிவித்துள்ளது.

இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதாரம் பாரியளவு பின்னடைவை எதிர்நோக்கவில்லை என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

உயர்ஸ்தானிகரைக் கேளுங்கள் என்ற கேள்வி பதில் வீடியோ நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட போது இந்தக் கருத்துக்களை ரான்கீன் வெளியிட்டுள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கோர விபத்து சம்பவ இடத்தில் இளைஞன் பலி!



(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப் பகுதியில் நேற்று பி.ப. 1.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் சம்பவ இடத்திலேயே இளைஞர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் 2 ஆம் யுனிற் முரசுமோட்டையைச் சேர்ந்த பத்மசிங்கம் லதீபன் (வயது - 22) என்பவரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த லொறியுடன் பரந்தன் பகுதியிலிருந்து கிளிநொச்சி (15 ஆம் பக்கம் பார்க்க)

## தனிப்பட்ட தகராறு காரணமாக 3 இராணுவத்தினர் சுட்டுக்கொலை

### சாவகச்சேரியில் சம்பவம்

(கொழும்பு)

சாவகச்சேரியில் இராணுவ வீரர்கள் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி சிறிமுருகன் ஆலயப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிலாபம், கலாவத்தையைச் சேர்ந்த எம்.எஸ். சி.பெர்ணான்டோ (வயது - 20), தங்காலை, உஷாபபிட்டியவைச் சேர்ந்த கே.ஜ.டி.கப்புக்கொட்டுவ (வயது - 29) மற்றும் காலகல்வத்தையைச் சேர்ந்த ஆர்.எம்.ஆர்.ரட்னாநாயக்கா (வயது - 24) ஆகிய மூவருமே உயிரிந்தவர்களாவர்.

மூவருக்குமிடையில் நிலவிய தனிப்பட்ட பகைமையே இக்கொலைக்கான காரணமெனவும், கொல்லப்பட்ட (15 ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் பிரச்சினைகளைக் கண்டறிய கிளிநொச்சியில் குறைகேள் ஒன்றுகூடல்

(கிளிநொச்சி)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி பொதுமண்டபத்தில் பொதுமக்களின் நடைமுறைப் பிரச்சினைகளைக் கண்டறிவதற்கான குறைகேள் ஒன்றுகூடல் ஒன்று நடைபெறவுள்ளது. பொதுமக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இயன்றளவு உரிய அமைச்சுக்களிடமிருந்து பெற்றுத்தரப்படவுள்ளது. இதில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார பங்கு பற்றவுள்ளார்.

இந்த ஒன்றுகூடலில் பொதுமக்கள் கலந்துகொண்டு தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை இலகுவாகக் காணமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரசாங்க அதிபரால் மாவட்டத்தின் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கிராம அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டு பொதுமக்களுக்குத் தகவல்கள் வழங்க ஏற்பாடு செயயப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அந்தந்த அமைச்சுக்களூடாக உடனடியாகவும் விரைவாகவும் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே இந்த ஒன்றுகூடலின் நோக்கம் என மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த ஒன்றுகூடலில் பொதுமக்கள் கலந்துகொண்டு தமது பிரச்சினைக்குத் தீர்வுகளைக் காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(142)

# கிளிநொச்சி மாவட்ட செயலக கட்டடத்தொகுதிக்கு அடிக்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 253 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளும் கொண்ட புதிய மாவட்டச் செயலக கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

புகையிரத நிலைய வீதி, திருநகரில் இந்தப் புதிய மாவட்டச் செயலக கட்டடத்தொகுதி அமையவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (142)

# கடற்கரைப் பூவரசு, வண்ணக்கனவு வவுனியாவில் இன்று வெளியீடு

கவிஞர் ஆரணியின் "கடற்கரைப் பூவரசு" கவிதைக் கதம்பம் "வண்ணக்கனவு" சிறுவர் பாடல் வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெறவுள்ளது. கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்த்துரையை வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்சும் வெளியீட்டுரையை வலம்புரி நாளிதழ் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் வழங்கவுள்ளார்.

"கடற்கரைப் பூவரசு" நூலை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வவுனியா மாவட்ட அரச அதிபரும் "வண்ணக் கனவு" நூலை வவுனியா வடக்குப் பிரதேச செயலர் க.பரந்தாமனும் வெளியீடு செய்துவைப்பார்கள். நயப்புரையை தமிழருவி த.சிவகுமாரனும் ஆசிரிய கல்வியியலாளர் ந.பார்த்தீபனும் வழங்க உள்ளார்கள். (142)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00மணிவரை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக இராஜ வீதியில் இருந்து கோப்பாய் சந்தி வரை கைதடி மானிப்பாய் வீதியில் கோப்பாய் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்தடை இருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும், வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதாலும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை, 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை தென்மராட்சிப் பிரதேசத்தில் மின்தடை இருக்கும்.

13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 15 ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 17 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், திருநெல்வேலி சந்தியிலிருந்து பரமேஸ்வரா சந்திவரையான பிரதேசம், இணுவில்,கோண்டாவில், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, கோம்பயன்மணல் பிரதேசம், தட்டார்தெரு, ஓட்டுமடம் ஆகிய இடங்களில் மின்தடை இருக்கும்.

18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, யாழ். பிரதான வீதியில் பண்ணை முதல் பஸ்ரியன் சந்திவரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உல்லாசப் பயணிகளுக்கு போக்குவரத்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். ரில்கோ சிட்டி ஹோட்டல் உல்லாசப் பயணிகளின் நன்மை கருதி உல்லாச போக்குவரத்துச் சேவையொன்றை ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணத்திற்கு வரும் உல்லாசப் பயணிகள் யாழின் முக்கிய இடங்களை பார்வையிடும் வகையிலேயே நேற்று முன்தினம் முதல் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்)

# யுத்த காலத்தில் சேதமடைந்த அரிசி ஆலைகள் புனரமைப்பு

யுத்தகாலத்தில் சேதமடைந்த அரிசி ஆலைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கே.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் பிரதேசத்தில் பண்டத்தரிப்புப் பகுதி அரிசி ஆலை, வடமராட்சி பிரதேசத்தில் உடுப்பிட்டி பகுதி அரிசி ஆலை, தென்மராட்சிப் பிரதேசத்தில், சாவகச்சேரி பகுதி அரிசி ஆலை, தீவகப் பிரதேசத்தில் வேலணைப் பகுதி அரிசி ஆலை போன்றனவே புனரமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கான நிதி கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார். (எஸ்)

# சாரதி அனுமதிப்பத்திர பரீட்சை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் இன்று நடைபெறவிருந்த சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைகள் யாவும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடைபெறாதெனவும் இதற்குப் பதிலாக இப்பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை குறித்த நேர அட்டவணைக்கமைய நடைபெறும் எனவும் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித் தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1285)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜேம்ஸ் யூட் மரியரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாயநாதன், வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் க.கனகராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (135)

# பசுமைக் கிராமமாக புதுமுறிப்பு அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தில் பசுமைக்கிராமம் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று நடைபெற்றது. கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். பசுமைக் கிராமத்துக்கான மரங்கள் நாட்டிவைக்கப்பட்டதுடன் விவசாயிகளின் தோட்டத்துக்கான பலவிதமான விதைகளும் அரச அதிபரினால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. அத்துடன் பாடசாலை தோட்டத்துக்கான விவசாய உபகரணங்களும் பாடசாலைக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரன், விவசாயத் திணைக்களப பிரதிப் பணிப்பாளர் கே.செல்வராசா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளர் பி.தவநாதன் மற்றும் அதிகாரிகளும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (137)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்**

- **3 ஆம், 4 ஆம் வருடம் வணிகமாணி / தொழில் நிர்வாக மாணி - இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 2010**
- **1ஆம், 2 ஆம் வருடம் வணிகமாணி / தொழில் நிர்வாக மாணி - இரண்டாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் 2010**
- **1ஆம், 2ஆம், 3ஆம் வருடம் (புதிய கட்டமைப்பு) தொழில் நிர்வாகமாணி - முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2011**

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் 12.03.2012 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50 பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலத்தில் 19.03.2012 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

**பதிவாளர்,**
**09.03.2012.** (C/1320)

# குகநாதன் மீதான தாக்குதல் சந்தேக நபருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

உதயன் செய்தியாளர் குகநாதன் தாக்கப்பட்ட வழக்கின் பிரதான சந்தேகநபருக்கு யாழ். நீதவான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது. இவருக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆறு களவுகள் தொடர்பான வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நேற்று முன்தினம் இவர் மீதான வழக்கு விசாரணை நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குற்றவாளிக்கு இரண்டு இலட்சம் ரூபாவில் இரண்டு ஆட்பிணையிலும் 20 ஆயிரம் காசுப்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டது. பிணையாளியில் ஒருவர் அரச உத்தியோகத்தராக இருக்கவேண்டும் எனவும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நீதிமன்றில் கையொப்பம் இடவேண்டும் எனவும் இவருக்கு நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. (பா)

# மனைவி தொடுத்த தாபரிப்பு வழக்கு இரண்டாவது கணவருக்கு பிணை

முதல் கணவன் மூலம் ஒரு பிள்ளைக்குத் தாயான பெண்ணொருவர் பின்னர் அவரை விட்டுப் பிரிந்து இன்னொருவரைத் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான பின்னர் இரண்டாவது கணவரையும் விட்டுப் பிரிந்து முதல் கணவனோடு சென்று வாழ்ந்தார். மீண்டும் அவரைக் கைவிட்டுவிட்டு இரண்டாவது கணவரிடம் திரும்பிவந்து தற்போது அவரையும் விட்டுப் பிரிந்து இரண்டாவது கணவர் மீது தாபரிப்பு வழக்குத் தாககல் செய்துள்ளார். யாழ். நீதிமன்றத்தில் இவ்வழக்குத தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நேற்று இவ்வழக்கு யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இரண்டாவது கணவன் ஐந்து தடவைகள் திருமணம் செய்துகொண்டவர் எனவும் அதில் மூன்று திருமணப் பதிவுப்பத்திரங்கள் தன்னிடம் உள்ளதாகவும் தாபரிப்புப் பணம் கோரி வழக்குத் தொடர்ந்துள்ள பெண் தெரிவித்துள்ளார். முதல் கணவன் மூலம் பிறந்த பிள்ளை திருமணமாகி கணவனுடன் குடும்பம் நடாத்தி வருவதாகவும் இப்பெண் தெரிவித்தார். வழக்கை விசாரணை செய்த யாழ். நீதவான் மா.கணேசராசா இரண்டாவது கணவனை முப்பதாயிரம் ரூபாவுக்கு இரண்டு ஆட்பிணையில் செல்வதற்கு அனுமதியளித்து வழக்கினை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரி தரப்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆஜராகியிருந்தார். (137)

உண்மையும் பொய்யும் இவ்வுலகில் கலந்தே இருக்கின்றன. தயிரில் வெண்ணையைப் பிரித்தெடுப்பதுபோல, உண்மையை மட்டும் தேர்ந்தெடுங்கள். உண்மையின் பக்கமே இறைவன் இருக்கிறான்.

- சுவாமி விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## குற்றங்களை நிறுத்த இணைவோம்!

குடாநாட்டில் சமீப காலத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பது குறித்து பலரும் கவலை வெளியிட்டு வருகிறார்கள். போராட்ட காலத்தில் அடக்கி வைக்கப்பட்டிருந்த குற்றவாளி மனங்கள் போர் முடிந்த சூழலில் மீண்டும் தலையெடுத்திருப்பதாக சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். கடந்தகாலப் போரினால் திரிபடைந்த மனங்களும் பெருமளவில் விரக்திக்கு ஆளாகியும், போதைப் பழக்கத்தில் வீழ்ந்தும் குற்றச் செயல்கள் அதிகரிக்கச் செய்திருப்பதாக உளவளத் துணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போர் நடந்த காலத்தில் அச்சமூட்டும் தண்டனைகள் மூலம் குற்றச் செயல்கள் ஒப்பீட்டளவில் குறைக்கப்பட்டிருக்கலாம். சவூதி அரேபியா போன்ற நாடுகளிலும் கையைக் காலை வெட்டுவதன் மூலம் களவுகளைக் குறைக்க முடிந்திருப்பது போலத்தான் அது. ஆனால் ஜனநாயக நடைமுறைகளூடாக குற்றச் செயல்களைக் குறைக்கும் முயற்சி என்பது அவ்வளவு இலகுவாகக் குறுகிய காலத்துக்குள் சாதித்துவிடக் கூடியதல்ல.

முதலில் ஜனநாயக நடைமுறைகளுக்கு நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. தொடர்ந்து ஜனநாயகக் காவல் அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலமும், மக்களை விழிப்பூட்டும் உளவளத் துணையாலோசனைகள் மூலமும் நாம் இதைச் சாதிக்க வேண்டியிருக்கிறது.

கட்சிகள் அமைப்புகளும் ஊடகங்களும் இத்தகைய குற்றச் செயல்களை வைத்து அரசியல் லாபம் தேடும் முயற்சியில் இறங்காமல், இது நம் சமூகத்தைச் சீரழிக்கும் பிரச்சினை; இவற்றை நிறுத்தி சமூகத்தைக் காக்கும் விதமாகவே நாம் பேசவும் செயற்படவும் வேண்டும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அல்லாமல், "குற்றச் செயல்களின் அதிகரிப்பு – நம் எதிர்ப்பு அரசியல் கோஷங்களுக்கு வாய்ப்பு" என்னும் விதமாக நம் சிந்தனை சென்றுவிடக் கூடாது.

குற்றச் செயல்கள் நம் நாடளாவிய ரீதியில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும்தான் நடக்கிறது. விரக்தியுற்ற மனங்கள் கட்டுப்பாடற்ற போதைப் பழக்கத்தில் வீழ்கின்றன. இதுவும் பின் விளைவுகளை உணராமல் அல்லது பொருட்படுத்தாமல் குற்றச் செயல்களுக்குத் துணிய வைத்துவிடுகிறது.

"காந்தியாரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தால், குடி எல்லா நேரங்களிலும் எல்லா நபர்களிடத்திலும் தீமை பயப்பதில்லை என்பதை அவரிடம் விளக்கி அவரை ஒப்புக்கொள்ள வைத்திருப்பேன்" என்று எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒருசமயம் சொன்னார். ஆனால், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களிடம் அது ஒரு கருவியாகி விடுவதை அவரும் மறுக்க முடியாது.

மிதமிஞ்சிய போதை, குற்றவாளியை, அவனுக்குப் பின்னால் நேரவிருக்கும் தண்டனைகளை மறதியாக்கி விடுகிறது. மனதில் அழுக்காறுடன் அலையும் ஒருவனை குரூரமான மிருகக் காரியங்களைச் செய்யத் துணிவுடையவனாக்கி விடுகிறது. அவனிடம் செல்லும் போதை சமுதாயத் தீமையாகிறது.

போதைக்கு அடிமையாதலின் தீமை என்பது இத்தகைய குற்றச் செயல்கள் மட்டுமல்ல. பொருளாதார இழப்பும், சொந்தக் குடும்பத்தின் சீரழிவுக்கும் காரணமாகிறது. ஒவ்வொரு போதை அடிமையும் ஒரு குடும்பத்துக்கு நிரந்தரச் சுமையாக மாறிவிடுகிறார். ஆங்கிலேயர்கள் சீனாவை அடிமைப்படுத்தியதே போதைப் பழக்கத்தை அந்த நாட்டில் அறிமுகப்படுத்தியதன் மூலம்தான் என்பார்கள்.

சமூக நபர்கள் போதைக்கு அடிமையாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும், குற்றவாளிகள் உருவாகாத வகையில் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பும் ஒவ்வொரு சமூக உறுப்பினருக்கும் உரியது.

நடக்கின்ற குற்றங்கள் யாவுக்கும் அரசியல் சாயம் பூசிவிட முனைவோமானால், அது அரசியல் லாபத்திற்காக, குற்றங்கள் நடைபெறுவதை விரும்புகின்ற மனநிலைக்கு நம்மைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும். அதில், அனைவரும் விழிப்புடனிருப்பது அவசியம்.

– ஆசிரியர்

# யாழ். குடாநாட்டில் இரு மாதங்களில் 24 சிறுமிகள் மீது பாலியல் வன்முறை

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்தின் கடந்த இருமாதங்களில் 24 சிறுமிகள் பாலியல் வன்முறைச் சம்பவங்களுக்கு உட்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சின்னையா சிவரூபன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 32 பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளது. 2010 ஆம் ஆண்டு 102 ஆக இருந்தது. 2011 ஆம் ஆண்டு 182 ஆக அதிகரித்திருந்தது.

எனினும் பாலியல் வன்புணர்வுக்குட்படுதப்பட்ட சிறுமிகள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வருகினறதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுவரை காலமும் பதிவுசெய்யப்பட்ட பாலியல் வன்முறைச் சம்பவங்களில் நெடுந்தீவுப் பகுதியில் இடம்பெற்ற 12 வயதுடைய சிறுமியின் பாலியல் வன்முறைச் சம்பவம் மிகவும் மோசமான முறையில் பாலியல் வன்முறைக்கு உடபடுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தது.

சிறுமிகள் மீதான வன்முறைச் சம்பவங்களின் கொடூரத்தன்மை அதிகரித்துச்செல்கின்றன.

இத்தகைய வன்முறைப் போக்குக்கு மக்களிடையே அருகியுள்ள விழிப்புணர்வு, சிவில் நிர்வாகத்தில் காணப்படுகின்ற மென்மைப் போக்கு, ஆளணி மற்றும் வளப்பற்றாக்குறை என்பன முக்கிய காரணிகளாகும்.

அத்துடன் சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை குற்றவாளிகள் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதும் ஒரு காரணமாகும். சிறுமிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வன்முறைகளின் அளவுக்கு ஏற்ப குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைப்பதாகவும் தெரியவில்லை.

குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்குவதில் நீண்டகாலம் எடுப்பதும் இததகைய குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதற்கு முக்கிய காரணமாகவும் இருக்கிறது.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாது தடுப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கையிலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

பாதிக்கப்படுகின்ற சமூகத்தில் பிரச்சினைகள் எதிர்கொள்வதற்கு அந்தந்தச் சமூகம் ஒருங்கிணைந்த முறையில் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் அவ்வாறு செயற்படும் பட்சத்தில் பெண்கள் சிறுமிகள் மீதான பாலியல் வன்புணர்வு செயல்களைத் தடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (எஸ்)

## பொது நூலகங்களில் மகளிர் தின விழா

(சாவகச்சேரி)

மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் சாவகச்சேரி மீசாலை, நுணாவில் பொது நூலகங்கள் இணைந்து வழங்கும் மகளிர் தினவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெயதீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக ஆசிரியை சிந்துஜா பிரணவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக திருமதி புத்திசிகாமணி திருமதி வசந்தகோகிலம் யக்சீன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண உள்ளூராட்சி திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திருமதி அஜவா சிவதாஸ், தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி ஆர்.இரகுநாதன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற பிரதம எழுதுநரும் சமூக சேவகியுமான திருமதி கீர்த்திநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (11)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொது நூலக ஆலோசனை அபிவிருத்திக் குழு வாசகர் வட்ட பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும் என நூலகர் அறிவித்துள்ளார். (11)

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி யாழ். தகவல் வழிகாட்டல் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் மீளக் குடியேறும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்.ஒஸ்மானியக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் யாழ்.பிரதேச செயலகர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி உதயன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். மீள்குடியேறி பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தாய்மார்கள், சகோதரிகள், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிலையத்தின் செயலாளர் ஐ.அஸ்மின் தெரிவித்துள்ளார். (105)

## இலக்கிய விருதுக்கான நூல்களை அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கியப்பேரவை வருடாவருடம் சிறுகதை, நாவல், காவியம், கவிதை, சிறுவர் இலக்கியம், ஆய்வு, சமயம், பல்துறை நாடகம், அறிவியல், மொழிபெயர்ப்பு (வேற்று மொழியிலிருந்து தமிழில்) ஆகிய துறை சார்ந்த இலக்கிய நூல்களுக்கு தெரிவின் மூலம் விருது வழங்கி வருகின்றது.

அந்தவகையில் கடந்த 2011ஆம் ஆண்டு வெளிவந்த இத்துறைகள் சார்ந்த இலக்கிய நூல் களுக்கு விருதுகள் வழங்கப்பட இருப்பதனால் குறிப்பிட்ட ஆண்டில் நூலினை வெளியிட்ட நூலாசிரியர்கள் நூலின் ஒரு பிரதியை விருதின் தேர்வுக்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதிகு முன்னர் சி.சிவதாசன் செயலாளர், இலங்கை இலக்கியப்பேரவை, இல. 58, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு அல்லது சேர்ப்பிக்குமாறும் நூல்கள் இலங்கையில் பிரசுரமானதாக இருக்க வேண்டும் எனவும் பேரவைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசிய அமைப்புக்கள் அரசிடம் தீர்வைக் கோரவில்லை

(குருநகர்)

13 ஆவது திருத்தச் சட்டமூலத்தினூடாக தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு முடிவை வைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ வேறெந்த தமிழ்த் தேசிய அமைப்புக்களுமோ அரசாங்கத்தை இதுவரை கேட்கவில்லை.

இவ்வாறு ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெற்ற 'சமகால அரசியல் ஒரு பார்வை' எனும் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய தோழர் தவராசா தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், பதினெட்டாவது அரசியல் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு விட்டது. விரைவில் 19 ஆவது சட்டமூலம் நிறைவேற்றத் தயாராகியுள்ள இந்த நிலையில், பல வருடங்களுக்கு முன்பாக நிறைவேற்றப்பட்ட 13 ஆவது சட்டமூலத்துக்கு மேலாகவும் போய் தீர்வைக் காண முடியும் என்று கூறிவருகின்ற அரசு இன்னமும் ஏன் பின்னடித்து வருகிறது.

அதைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்று தமிழர் சார்பான எந்த அமைப்புக்களுமோ இன்னமும் வற்புறுத்திக் கேட்கவும் முன்வரவில்லை என்றார்.

தலைமையுரையில் ஏ.சி.ஜோர்ஜ் தெரிவிக்கையில், இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பை விமர்சிக்கும் போக்கு ஏற்பட்டுள்ளது. அதேவேளை, ஜெனிவாவில் நடைபெற்று வரும் தொடர் கூட்டத்தில் இலங்கை மீது அழுத்தத்தைக் கொடுக்கும் விதத்தில் பொருளாதாரத் தடை ஏற்படுத்தப்பட்டால் இங்கே பெரும் நெருக்கடியைத் தோற்று விக்கும் சர்வதேச மட்டத்தில் இலங்கைப் பணத்தின் வீழ்ச்சி போன்றவை மேலும் இக்கட்டுக்குள் வீழத்த இடமுண்டு.

சமகால அரசியல் தமிழ்மக்களுக்கு மாத்திரம் தான் நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் பொருளாதார வீழ்ச்சி மற்றும் பணவீக்கம் காரணமாக தென் இலங்கை மக்கள் மத்தியிலும் பல்வேறு நெருக்கடிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்றார்.

சொ.சிவபாலன் (சிற்பி) ச.தியாகலிங்கம் தோழர் நடராசா, க.தணிகாசலம், விசுவலிங்கம், கனடா வானவில் தவபாலன் ஆகியோரும் உரையாற்றினர்.(68)

# தவறான அரசியல் செயற்பாடுகள் கல்வி வளப்பூர்த்திக்கு இடையூறு

## ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெற்ற இனப் பிரச்சினையைத் தொடர்ந்து சில தமிழ்த் தலைமைகள் மேற்கொண்டு வரும் தவறான அரசியல் செயற்பாடுகள் வடக்கு மாணவர்களின் கல்விக்கு அவசியமான வளங்களைப் பூர்த்தி செய்வதில் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது.

கோண்டாவில் சி.சி. தமிழ்க் கலவன் பாடசாலை பல கல்விமான்கள், புத்தி ஜீவிகளின் உருவாக்கத்திற்கு அடித்தளமாக விளங்கியதுடன் இப்பாடசாலையின் எதிர்கால கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கு ஏற்றவிதத்தில் அனைத்து உதவிகளையும் மேற்கொள்ளவிருப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.



அண்மையில் நடைபெற்ற பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தத்தால் வடபகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சி பாதிக்கப்பட்ட நிலையிலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபரும், ஆசிரியர்களும் காட்டிய அக்கறையின் காரணமாக கற்பித்தல் செயற்பாடுகளில் சிறப்பான முன்னேற்றம் கண்டு வருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதனோடு இணைந்தாகக் கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்குத் தேவையான அவசியமான வளங்களை பாடசாலைகள் கொண்டிருப்பதும் மிக அவசியமாகும்.

இப்பாடசாலை மாணவர்களின் எதிர்காலக் கல்வி செயற்பாடுகளுக்குத் தேவையான வளங்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையுடன் தேவையான திட்டங்களை கூடிய விரைவில் இனங்கண்டு நடைமுறைப் படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன், இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் இ.அருணாசலம், கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் எஸ். சண்முககுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலை அதிபர் நா.சிவசிதம்பரம் தலைமையில் இடம்பெற்ற இந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வுக்கு விசேட விருந்தினராக யாழ்.கல்வி வலயத்திற்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் பூ.குகதாசனும் கலந்து சிறப்பித்தார். கௌரவ விருந்தினர்களாக ஈ.பி.டி.பியின் சர்வதேச அமைப்பாளர் மித்திரன், கோண்டாவில் ஞானவீர.ச.ச. நிலையத் தலைவர் எம்.இராஜேந்திரன், அப்பகுதி சுகாதாரப் பரிசோதகர் நா.பிறேம்குமார், வடமாகாண தொழிற்திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் மற்றும் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

# சிறுவர் உரிமைகள் கண்காட்சி யாழில் சிறப்பாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

லீட்ஸ், டிப்லிஸ் நிறுவனங்கள் இணைந்து யாழ்.மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து நடத்தும் சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கண்காட்சியும், மாற்றுவலுவுள்ள பிள்ளைகளின் ஆக்கத்திறன் கண்காட்சியும் விற்பனையும் மெதடிஸ்த திருச்சபை வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

யாழ்.மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் சதா சிவம் கோதை நாடா வெட்டி கண்காட்சிக் கூடத்தினைத் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துக் காணப்படும் தற்போதைய கால கட்டத்தில் சிறுவர்கள் பாதுகாப்புடன் இருப்பதற்கு சிறுவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் நோக்கத்துடன் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக லீட்ஸ் நிறுவன மாவட்ட அதிகாரி கே.கனேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அரச சார்பற்ற நிறுவனங்களின் உபதலைவர் வைக்றோ உட்பட நிறுவன இணைப்பாளர் வை.ரமணதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன்றும் நடைபெறவிருக்கும் கண்காட்சியினை பார்வையிட்டு சிறுவர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (எஸ்)

# சட்டவிரோத மணல் அகழ்வு; வீடமைப்போர் நெருக்கடி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-பல்லவராயன் கட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், இதனால் மணல் தேவையான மக்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்லவராயன் கட்டுக்குள வான்பகுதியில் இந்தச் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் வீடமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மணல் தேவைப்படும் வேளையில் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகளால் தாம் சிரமங்களுக்குள்ளாவதாகவும் இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (கே)

# துணுக்காய் பிரதேச வீதிகளை ஆவணப்படுத்தும் வேலைத்திட்டம்

(மல்லாவி)

முல்லைத்தீவு உள்ளூராட்சி வீதிகள் திணைக்களத்தினால் துணுக்காய்ப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வீதிகளை நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம் புள்ளியிட்டு ஆவணப்படுத்தும் வேலைத்திட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளை ஆவணப்படுத்தலின் 2ஆம் கட்ட செயன்முறையாக துணுக்காய் தொழில்நுட்ப அதிகாரி அ.அருந்தவராஜா தலைமையில் இந்த நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

இவ் ஆவணத்தில் புள்ளி அடிப்படையில் முன்னுரிமைப் படுத்தப்பட்ட முதல் 50 கிலோ மீற்றர் வீதிகளை திருத்தும் வேலைகளை மேற்கொள்ளும் வகையில் இதற்கான மதிப்பீட்டினைப் பெறும்பொருட்டு ஆரம்பக்கட்டமாக துணுக்காய் 1ஆம் யுனிட் ஊடாக பட்டுப்பூச்சி சந்தி வரை அளவு மேற்கொள்ளப்பட்டதுடன், பிரதேச சபையின் துறை சார்ந்த நன்கு பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்கள் இவ்வேலைத்திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, இவ்வீதிகளை அளவீடு செய்ததும் இவ் வருடத்துக்குள் உள்ளூர் வீதிகளுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. அவ்வாறு ஏனைய துறைசார் திணைக்களங்களுக்கு நிகராக உரிய நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி திட்டமிட்ட அடிப்படையில் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (143)

# 2ஆம் ஆண்டு பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 2 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிதியத் தலைவர் பா.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் கி.யோகேந்திரன், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இக்கூட்டத்தின் போது வருட நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறவுள்ளதாக செயலாளர் சி.சிவலிங்கம் தெரிவித்தார். (100)

## அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

திருநகர் இராஜசிங்கம் வீதியில் சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கு 200 ரூபா விலைக்கு 180 மில்லிலீற்றர் மதுபானம் விற்பனை செய்த ஒருவருக்கு யாழ்.நீதவான் நீதிமன்றம் பத்தாயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் தவறின் மூன்று மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

நேற்றுமுன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் யாழ். பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கினை நீதவான் மா.கணேசராசா விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். குறித்த குற்றத்தை ஏற்றுக்கொண்ட குற்றவாளிக்கு 10,000 ரூபா தண்டப்பணமாக செலுத்தவும், தவறின் மூன்று மாத சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார். (பா)

## பூநகரி கூட்டுறவுச் சங்கத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்

(முழங்காவில்)

பூநகரி ப.நோ.கூ.சங்கம் பூநகரி விவசாயிகளிடமிருந்து ஜெயபுரத்தில் உள்ள மத்திய நிலையத்தில் வைத்து நெல் கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் ப.நோ.கூ.ச. தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் பொதுவாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக வெள்ளைச் சம்பா நெல்லை கிலோ ஒன்று 30 ரூபா வீதமும், ஏனைய நெல் இனங்களை கிலோ ஒன்று 28 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

பூநகரியில் நெற்களஞ்சியத் திருத்த வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளது. இவ்வேலைகள் முடிந்தவுடன் வருகின்ற வாரமளவில் பூநகரியில் வைதது நெல்லினைக் கொள்வனவு செய்ய உள்ளதாக சங்கத் தலைவர் த.தயாரூபன் தெரிவித்தார். (112)







காரைநகர் பாடசாலைகளின் ஆவணங்கள் அடங்கிய தொகுப்பான தரிசனம் இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தரிசனம் பொறுப்பாசிரியர் வே.சிவனேசன் உரையாற்றுவதையும், மாணவிகளின் வரவேற்பு நடனத்தையும், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி.இராதாகிருஷ்ணன் இறுவட்டின் சிறப்புப் பிரதியை பா.வேதநந்தினிக்கு வழங்குவதையும் காணலாம். (50)

## பெண்களை சட்ட ரீதியாக வலுப்படுத்தும் நாடக நிகழ்வு




(காரைநகர்)

வியாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் பெண்களை சட்ட ரீதியாக வலுப்படுத்தல் தொடர்பான நாடகம் அண்மையில் சைவ வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

காவேரி கலாமன்ற மாணவ மாணவியர்களால் மிகவும் துல்லியமாக நடைபெற்ற இந்நாடகம் சிறப்பானதாய் அமைந்திருந்ததாக பார்வையாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சட்டத்தரணி செல்வி ம.கோசலை, ச.சதீஸ், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் கே.இந்திரகுமார் ஆகியோர் சட்ட நுணுக்கங்களை வெளிப்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வை வழங்கினர். (50)

## பரமர் சங்கமம்



முன்னதாக 90,95 ஆம் ஆண்டுகளுக்கு உட் படுகின்ற காலங்களில் அரசின் பொருளாதாரத் தடை காரணமாக வீடுகளில் சமைத்து மூன்று வேளைகளிலும் வயிறாறச் சாப்பிடுகின்ற நிலைவரம் குடா நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான குடும்பங்களுக்கு இருக்கவில்லை. அதனால் தமது பிள்ளைகளை இயக்கத்துக்கு கூட்டிக்கொண்டு போய் இணைத்து விட்டதால் 'வீரப் பெற்றோர்' என்ற பெயர்களை வாங்கிக் கொண்டதையும் குறிப்பிட்டிருந்தேன்.

அதேவேளை இயக்கங்கள் இங்கே முளைவிட்டு வளர்ந்த 1980-1985 களில் வீடு வீடாக சோத்துப் பார்சல்களை சேகரித்துச் சென்று இயக்கங்கள் தம்மை வளர்த்துக் கொண்டதும் இருந்தது.

வீட்டுக்கு வீடு நாளொன்றில் ஒன்று,இரண்டு வசதிபடைத்தவர்கள் பத்து,இருபது,முப்பது பார்சல்களும் வழங்கி ஆதரவளித்ததை மறந்து விடவோ மறைத்துவிடவோ முடியாதல்லவா?

ஒரு போராளியை வளர்த்தெடுக்க ஐம்பது ஆயிரம் ரூபா செலவானதாக குத்து மதிப்பீட்டில் சொல்லப்பட்டது. அந்தத் தொகை இன்றைய பணவீக்கக் கணக்கில் ஒன்றரை இலட்சம் ரூபா எண்டால் பாருங்களேன்.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இன்றும் அவர் இருக்கின்றார். அவருடைய தொழில் வருமானம் அபரிதமானது. அவருக்கு எந்த நேரம் ஆகிலும் ஓடர் செய்தால் ஐம்பது பார்சல் எண்டாலும் கொடுத்து வந்தார்.

அந்தளவுக்குக் கொடுத்துதவும் மனம் இருக்க வேண்டுமே! அப்படியானவர்களுக்குப் பிற்பாடு பல அச்சுறுத்தல்களும் நேர்ந்தது. அவர்களால் அல்ல எதிரணியினரால்.

இவ்விதம் உணவுப் பார்சல் எண்டில்லாமல் பண உதவிகள் வழங்கியவர்களும் இருந்தார்கள். அப்படிக் கொடுக்காத தனவந்தர்கள் பிற்பாடு இவ்வளவு தொகை கட்ட வேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டனர்.

அக் காலத்தில் இப்படிக் கொடுத்தாலும் பயம். கொடுக்காவிட்டாலும் பயம் எண்ட இருதலைக் கொள்ளி எறும்பைப் போன்று வாழ்க்கையை நகர்த்தியவர்களும் இருந்தனர்.

இந்திய இராணுவம் இங்கே இருந்த சமயம் சுன்னாகம் பகுதி பிரபல வர்த்தகர் ஒருவர் அழைத்துச் சென்று மிரட்டப்பட்டதாக எனக்கு அப்பகுதி இன்னொரு வர்த்தகர் சொன்னார்.

அப்பொழுது அந்த வர்த்தகர் சமயோசிதமாக நாங்க குடுக்கிறே குடுக்கிறேண்டு நச்சரிக்கிறீங்க உங்கட நாட்டில உள்ளவங்களும் குடுத்திருக்கிறாங்க அதையேன் விட்டு வைச்சீங்க எண்டு கேட்டதாகவும் -

அதற்கு யாரவர் என்று விசாரித்தபோது தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் 4கோடி ரூபா குடுத்தேதான் உலகமே அறியுமே எண்டு துணிச்சலுடன் கேட்டதாகவும்-

அதன் பின்பாக வர்த்தகர் விடுவிக்கப்பட்டதாகவும் கூறியிருந்தார். இது மட்டுமா இப்படி எத்தனையோ சம்பவங்களில் தப்பித்துக் கொண்டவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் அனந்தம்.

நாட்டிலேற்படும் பிரளயங்களில் குற்றம் செய்தவர் மட்டும் பாதிப்பதில்லை. அப்பாவிகளும் தண்டிக்கப்பட்டுள்ளதைக் கண்ணூடாகக் கண்டுவருகிறது புதுமை ஒண்டுமில்லைத்தானே பாருங்கோ...

## பாடசாலைகளின் சுயவிபர ஆவணங்கள் இறுவட்டில் பதியப்படுவது சிறப்பானது

### -தீவக வலயக் கல்விப்பணிப்பாளர்-

(காரைநகர்)

காரைநகர் பிரதேச பாடசாலைகள் தொடர்பான சுயவிபர ஆவணங்களைக் கொண்ட தரிசனம் இறுவட்டு காரைநகர் மாணவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும் என தீவக வலயக கல்விப்பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற காரைநகர் பிரதேச பாடசாலைகளின் விபரங்கள் அடங்கிய தரிசனம் இறுவட்டு வெளியீட்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தரிசனம் இறுவட்டு ஊடாக இப்பிரதேசத்தில் உள்ள 16 பாடசாலைகளின் வரலாறுகளை நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது.

எந்த ஒரு பாடசாலையிலும் சுயவிபர ஆவணங்களைத் தொகுத்து எடுப்பது கடினமானது. அந்தவகையில் தரிசனம் பொறுப்பாசிரியர் சிவனேசனின துடிப்பான செயற்பாட்டினால் இந்த இறுவட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இதில் காரைநகரிலுள்ள பிரசித்திபெற்ற இடங்களான கசூரினா கடற்கரை, காரைநகர் சிவன்கோயில், கடற்கரை வெளிச்சவீடு போன்றவற்றை முதன்மைப்படுத்துவதாக இவ் இறுவட்டு அமைந்துள்ளது என்றார்.

இந்நிகழ்வில் தரிசனம் பொறுப்பாசிரியர் வே. சிவனேசன் கலந்து கொண்டதுடன வலயக் கலவிப்பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஸ்ணன், தொழிலதிபர் இ.எஸ்.பி. நாகரத்தினம் திருமதி பா.தேவநந்தினி ஆகியோருக்கு பிரதிகளை வழங்கி வைத்தார்(50)

## பாலபண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம்

(யாழ் நிருபர்)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 2011 கல்வியாண்டுக்கான பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

2012 புதிய கல்வியாண்டுக்கான பாலபண்டிதர், பண்டிதர் கற்கைநெறிக்கான புதிய வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் இவ்வகுப்புக்களில் கலந்து கொண்டு கற்க விரும்புவோர் அன்றைய தினம் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாலபண்டிதர் பரீட்சையில் சித்திபெற்றோர் விபரம்: க.மங்களமூர்த்தி-அராலி தெற்கு, அராலி(நூனசித்தி), வெற்றிவேலு வரதிதாசன்- சிந்துபுரம், வட்டுக்கோட்டை (சித்தி முதலாம் பிரிவு), தம்பிஜயா மனோஜ்குமார்- செட்டிவளவு, இணுவில் மேற்கு, இணுவில்(நூனசித்தி), திருமதி நவநீசன் உதயலதா- சங்கானை மேற்கு, சங்கானை (சித்தி முதலாம் பிரிவு), திருமதி சு.ஶ்ரீலோஜினி- பிரமனோடை, கோப்பாய்வடக்கு (சித்தி), திருமதி ஜெயகாந்தராஜா மணிமலர்- இந்து பாடசாலை வீதி,கோண்டாவில் மேற்கு (சித்தி இரண்டாம் பிரிவு), செல்வி.ஏ.சுஜானா- உப்புகுளம், மன்னார்(சித்தி இரண்டாம் பிரிவு)

பண்டிதர் பரீட்சைப்பெறுபேறுகள்: திருமதி கவிதா சந்திரகுமார்-பிரவுண் வீதி, கொக்குவில்(சித்தி), மார்க்கண்டு கணநாதன்- அராலி வடக்கு, வட்டுக்கோட்டை(நூனசித்தி), செல்வி விமலாவதி கந்தையா- மாரீசன் கூடல், இளவாலை (நூனசித்தி) (10)

## கூட்டம்

(வடமராட்சி கிழக்கு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் தலைவர், செயலாளர்கள், ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் கிளைத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது. (70)

## ஆன்மீக பேருரை

(திருநெல்வேலி)

மருதனார் மடம் அருள்வளர் ஆஞ்சநேயர் ஆலயத்தில் இன்று காலை 10.00 மணிக்கு ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் தலைமையில் பேராசிரியர் விஜயலட்சுமி இராமநாதனின் ஆன்மீகப்பேருரை இடம்பெறவுள்ளது. (60)

## டைனமட் வெடித்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

டைனமட் வெடி மூலம் கற்கள் உடைத்த இருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆவரங்கால் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இடம் பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் சிவகுமார்(வயது-29), பத்மநாதன் சசிக்குமார்(வயது-30) ஆகிய இருவருமே படுகாயம் அடைந்த நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எஸ்)

## கட்டாக்காலிகளால் நெல் விதைப்பு பாதிப்பு

(ஆனைக்கோட்டை)

வலிகாமம் பகுதிகளில் நெல் அறுவடை முடிந்தகையுடன் அங்கு மாடுகளை கட்டாககாலியாக விடப்பட்டுள்ளதால் அவை வீதிகளிலும், ஏனைய இடங்களிலும் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதோடு பல இடைஞ்சல்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

குறிப்பாக ஆனைக்கோட்டை, நவாலி, கல்லுண்டாய், பகுதிகளில உள்ள விவசாயிகள் நெல விதைப்பினை மேற்கொள்ள எண்ணியிருந்தனர். ஆயினும் அங்கு ஆடு, மாடுகளை சிலர் மேய்ச்சலுக்காக அவிழ்த்து விட்டுள்ளதால் விதைப்பு எதுவும செய்ய முடியாது விவசாயிகள் கைவிட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. (104)

## முரசின் இன்றைய பலன்

(10.03.2012 –சனிக்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 27 ஆம் திகதி. துதியை பிற்பகல் 12.07 வரை. நட்சத்திரம் அத்தம் மாலை 5.35 வரை. மரண யோகம்.

இராகுகாலம் 9.23 - 10.53 வரை. சுபநேரம் 3.23 - 4.53 வரை.

எமகண்டம் 1.53 - 3.23 வரை. குளிகைகாலம் 6.23 - 7.53 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புதிய சிந்தனை, எதிர்ப்புகள் மறையும், பரஸ்பர அனுசரணை, வீண் வாக்கு வாதம். |
| ரிஷபம் | போட்டியில் வெற்றி, சேமிப்பில் உயர்வு, சகோதரர் உதவி, சுபகாரியங்கள். |
| மிதுனம் | காரியத்தடை, பிரச்சினைகள் தீரும், பெரியோர் ஆதரவு, நினைத்தது நிறைவேறும். |
| கடகம் | சௌக்கியம், முன்கோபம்தவிர், மருத்துவச் செலவுகள், திருமணம் கைகூடும். |
| சிம்மம் | பாராட்டுக்கள்,கடும் பணிச்சுமை, செய் தொழில் இலாபம், வெளிநாட்டு வாய்ப்பு. |
| கன்னி | நல்ல முயற்சி, பெண்களால் அவமதிப்பு, தவிர்க்க முடியாத பிரயாணங்கள், வெற்றி வாய்ப்பு. |
| துலாம் | பெருமைசேரும்,சொத்துக்களால் பிரச்சினை, அரசமுயற்சிகளில் நிதானம்,தொட்டது துலங்கும் |
| விருச்சிகம் | நன்மைகள்,வெளியூர்ப் பயணம், சொத்துக்கள்சேரும், உறவினர் உறவு பலமடையும். |
| தனுசு | அதிருப்தி, அனுசரித்து நடத்தல், புத்திர பாக்கியம், முன்னெச்சரிக்கை. |
| மகரம் | அனுகூலம், சுபகாரியங்கள், பெண்களால் நன்மை, போக்குவரத்தில் கவனம். |
| கும்பம் | கவனம் அவசியம், அரச வழியில் உதவி, தனவந்தர் நட்பு, சகோதரர்களால் செலவு. |
| மீனம் | எதிர்ப்புகள், பழைய கடன் தீரும், புத்திரப் பேறு, வீண் வாக்குவாதம். |




## சன்சயன், பிரிந்தாபன் சிறப்பான இணைப்பாட்டம்

# ஆதிக்கம் செலுத்துகிறது சென். ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

சன்சயன், பிரிந்தாபன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான 106ஆவது வடக்கின் பெரும் போர் மூன்று நாள் இனிங்ஸ் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தொடர்ந்தது. 72 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டு விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்த சென் ஜோன்ஸ், மீண்டும் 86, 90 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும் விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. இந்த நிலையில் ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த சன்சயன் மற்றும் பிரிந்தாபன் இணை அணியின் நிலையை உணர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஏழாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 98 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. தொடர்ந்து வந்த வீரர்கள் சிறிது நேரம் தாக்குப் பிடித்து ஆடினர். இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தனது முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஏ. சன்சயன் 76 பந்துகளில் 12 பவுண்டரிகள் அடங்கலாக 68 ஓட்டங்களையும், 81 பந்துகளை எதிர்கொண்ட பி. பிரிந்தாபன் இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 31 ஓட்டங்களையும் பெற்றனர். மற்றும் துவாரகசீலன் 98 பந்துகளில் மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வதூசனன் 28 ஓவர்கள் பந்து வீசி 68 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், கோகுலன் 34.1 ஓவர்கள் பந்து வீசி 89 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், சௌமிதரன் 7 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.


93 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி ஆமை வேகத்தில் ஆடிவந்தது. 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்த யாழ். மத்திய கல்லூரி அணி, இரண்டாவது விக்கெட்டை 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இழந்தது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை யாழ். மத்திய கல்லூரி அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் நிரோஜ் 109 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது சௌமிதரன் 89 பந்துகளை எதிர்கொண்டு ஆறு ஓட்டத்துடன் களத்தில் உள்ளார். பந்து வீச்சில் பிரிந்தாபன், சன்சயன், அட்றியன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

யாழ். மத்திய கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 17 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது. இன்று போட்டியின் இறுதி நாளாகும். யாழ். மத்திய கல்லூரி முதல் இனிங்ஸில் 144 ஓட்டங்கள்.

இதேவேளை, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவின் போது சிறு குழப்பம் ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டது. அதாவது மூன்றாவது பகுதி ஆட்டத்தில் 30 ஓவர்களுக்குப் பதிலாக 33 ஓவர்கள் வீசப்பட்டதாக அவர்களால் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. போட்டி விதியின் படி ஒவ்வொரு பகுதியும் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும். இதில் 30 ஓவர்கள் குறைந்தது வீசப்படவேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் 30 ஓவர்கள் வீசி முடிக்கப்படும் வரை அப்பகுதி நீடிக்கப்படும்.

அந்த வகையிலேயே நேற்றைய மூன்றாவது பகுதி ஆட்டம் 3.12 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு 5.12 மணியளவில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (42,20)

## இணைப்பாட்டத்தின் மூலம் போட்டியின் நிலை மாறும்



(யாழ்ப்பாணம்)

இன்றைய தினம் துடுப்பாட்டத்தில் சிறந்த இணைப்பாட்டத்தை ஏற்படுத்தி போட்டியின் போக்கை எமது திசைக்கு மாற்றும் முயற்சியில் எமது வீரர்கள் தீவிரம் காட்டுவார்கள் என நம்புகின்றேன் என்று யாழ். மத்திய கல்லூரி அணியின் பயிற்றுநர் எஸ். சுரேஷ்மோகன் தெரிவித்தார்.

106ஆவது வடக்கின் பெரும் போரின் இரண்டாம் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளர் எஸ். தனநேசன் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றைய தினம் மூன்றாவது விக்கெட்டுக்காக சிறப்பானதொரு இணைப்பாட்டத்தை எமது வீரர்கள் ஏற்படுத்தியிருந்தார்கள். இது போன்று இன்றைய தினமும் சிறப்பான இணைப்பாட்டத்தை அவர்கள் ஏற்படுத்துவார்கள் என நம்புகின்றேன். குறைந்தது இரண்டு இணைப்பாட்டங்கள் இவ்வாறு அமைந்தால் போட்டியின்போக்கை மாற்றியமைக்க முடியும் அதேவேளை, எதிரணிக்கு நெருக்கடியையும் ஏற்படுத்தலாம் என்று நம்புகின்றேன்.

நேற்றைய ஆட்ட நேர இறுதியில் நிரோஜ் ஆட்டமிழந்தது துரதிஷ்டவசமானது. இருப்பினும் திறமையான வீரர்கள் பலர் இன்னும் ஆடவேண்டியுள்ளமையால் அவர்கள் மூலம் நல்ல இணைப்பாட்டம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன். அதன் மூலம் போட்டியின் போக்கு மாற்றமையும் என எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (42)

## பந்து வீச்சு, களத்தடுப்பில் சிறப்பாக செயற்படுவோம்

(யாழ்ப்பாணம்)

பந்து வீச்சிலும், களத்தடுப்பிலும் சிறப்பான பெறுபேற்றை இன்றைய தினம் எமது வீரர்கள் வெளிப்படுத்தி இப்போட்டியில் வெற்றிபெற முயற்சிப்போம் என சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பயிற்றுநர் பி. லாவேந்திரா தெரிவித்தார்.

106ஆவது வடக்கின் பெரும் போரின் இரண்டாம் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளர் எஸ். தனநேசன் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பந்து வீச்சாளர்கள் நேற்றைய தினம் சிறப்பாக பந்துவீசியபோதும், களத்தடுப்பில் சில பிடிகளை நாம் தவறவிட்டு விட்டோம். அத்துடன் ரன் அவுட் சந்தர்ப்பங்களையும் தவறவிட்டு விட்டோம். இதன் காரணமாக யாழ். மத்திய கல்லூரி அணிக்கு மூன்றாவது விக்கெட்டுக்காக இணைப்பாட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் அது நேற்யை தினம் தகர்க்கப்பட்டுவிட்டது. இன்றைய தினம் எமது பந்து வீச்சிலும், களத்தடுப்பிலும் சில யுக்திகளை கையாண்டு எதிரணிக்கு நெருக்



கடி கொடுக்க முயற்சிப்போம். அதன் மூலம் போட்டியின் போக்கை எமது திசைக்குக் கொண்டுவந்து போட்டியில் வெற்றிபெறமுயற்சிப்போம். அத்துடன் நெருக்கடியான நேரத்தில் பிரிந்தாபன், சன்சயன் ஆகியோர் சிறப்பான இணைப்பாட்டம் ஒன்றை ஏற்படுத்தி அணியை வலுவானதொரு நிலைக்கு இட்டுச் சென்றமையே போட்டியின் போக்கு எமக்குச் சாதகமாக அமைந்தமைக்கு முக்கிய காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (42)

## முன்பள்ளி விளையாட்டு

(துணுக்காய்)

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாரதி நகர் - 3ஆம் யுனிட், யோகபுரம் பாரதி முன்பள்ளி சிறார்களின், விளையாட்டுப்போட்டி நிகழ்வு கடந்த புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாரதி நகர் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

முன்பள்ளி ஆசிரியை திருமதி அசோக்குமார் யசோதா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், விருந்தினர்களாக துணுக்காய் உதவி அரச அதிபர் எஸ்.குணபாலன் மல்லாவி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஐ.குணபால, மல்லாவி இராணுவ அதிகாரி லெப்டினன்ட் புத்திக, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதி திருமதி சாளினி விக்கிரமசிங்க, துணுக்காய் பிரதேச செலயக திட்டமிடல் பணிபபாளர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, பிரதேச சபைத் தவிசாளர் வீ.இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.(143)

## தெல்லிப்பளை கோட்ட வலைப்பந்து; மகாஜனாவை வீழ்த்தியது யூனியன்



(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வலைபந்தாட்டப்போட்டியில் 17வயதுப் பிரிவில் மகாஜனாக் கல்லூரியை வீழ்த்தி தெல்லிப்பளை யூனியன் கல்லூரி இலகுவாக வெற்றி பெற்று கோட்டமட்ட சம்பியனானது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தப் போட்டியில், போட்டி தொடங்கி முடியும் வரை மைதானத்தில் யூனியன் கல்லூரியே ஆதிக்கம் செலுத்தியது. யூனியன் கல்லூரி இறுதி வரை சிறப்பான ஆட்டத்தில் ஈடுபட்டது.

ஆட்ட நேர முடிவில் 22:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மகாஜனாக் கல்லூரியை வீழ்த்தி யூனியன் கல்லூரி வெற்றியீட்டிக்கொண்டது.

## பருத்தித்துறை கோட்ட அரை மரதன் ஓட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்டமட்ட அரை மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 7 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அதிபரின் அனுமதிக் கடிதத்துடன் வலயக் கல்வி அலுவலக விளையாட்டுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி நாளை நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் மேற்படி திகதிக்கு மாற்றப்பட்டதாக வலயக் கல்வி அலுவலர் அறிவித்துள்ளார். (109-93)

விளையாட்டுச் செய்திகள்

## தெல்லிப்பளை கபடிப் போட்டி; சென்.லூட்ஸ், கணேசன் சம்பியன்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச கபடிப்போட்டிகள் இளவாலை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற பெண்களுக்கான கபடிப் போட்டியில் இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக்கழகம் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழகத்தை 33:24 என்ற அடிப்படையில் வீழ்த்தி வெற்றிக் கிண்ணததை தனதாக்கிக்கொண்டது.

பலத்த கரகோசத்துடன் இடம்பெற்ற ஆண்களுக்கான கபடிப் போட்டியில் பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகம் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழகத்தை 42:28 என்ற அடிப்படையில் வீழ்த்தி வெற்றியீட்டியது. (93)





**யாழ். ஒஸ்மானியக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இல்லமெய்வல்லுநர் போட்டியில் விநோதஉடை நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும். இதில் அதிபர் எம்.எஸ்.எ.எம்.முபாரக் மற்றும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலய ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் சுப்பிரமணியம் உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதைக் காணலாம். (105)**

## ராவிட் அதிகார பூர்வமாக ஓய்வு

(பெங்களூர்)

வரவிருக்கும் கிரிக்கெட் போட்டிகளில் சாதனை படைக்க புதிய தலைமுறை இளைஞர்களுக்கு வழி விடுவதாக பிரபல கிரிக்கெட் வீரர் ராவிட் தனது ஓய்வை அதிகாரப்பூர்வமாக நேற்று அறிவித்தார். பெங்களூரில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த முடிவை அறிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஓய்வு பெறுவது எனக்கு கவலை அளித்தாலும் பெருமையுடன் விலகுகிறேன். 16 ஆண்டுகளாக இந்தியாவிற்காக சிறப்பாக பணியாற்றியுளளேன். ஓய்வு பெறுவதற்கு இதுதான் சரியான தருணம். இந்தியாவுக்காக நான் ஆடிய நாட்கள் எனது வாழ்நாளில் மறக்க முடியாதது. எனது கிரிக்கெட் வரலாற்றில் இது வரை எனக்கு துணையாக இருந்த பெற்றோர்கள், பயிற்சியாளர்கள், சக வீரர்கள் , ரசிகர்கள் மற்றும் பி.சி.சி.ஐ. க்கு எனது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். சச்சின் நான் எடுக்கும் பல முடிவுகளை ஆதரித்துள்ளார். சச்சின், கும்ளே ஆகியோருடன் ஆடியது எனது பெருமையாக கருதுகிறேன். எனது எதிர்கால வாழ்வு திட்டம் குறித்து வரும் ஜூனில் முடிவு செய்யவுள்ளேன் என்றார்.

ராவிட் இந்தியாவின் ஒரு சிறந்த வீரர் என்றும் அவரது இடத்தை நிரப்ப யாராலும் முடியாது என்றும் சச்சின் கூறியுள்ளார்.

## பூநகரி பெரு விளையாட்டு வெற்றிபெற்றோர் விபரம்

(முழங்காவில்)

பூநகரிப் பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப்போட்டி முடிவுகள் பூநகரிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அ.பிரபாகரனால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**கிரிக்கெட்** - முதலாமிடம் நாச்சிக்குடா ஜின்னா விளையாட்டுக் கழகம், இரண்டாமிடம் ஜெயபுரம் நண்பர்கள் விளையாட்டுக்கழகம்.

**கபடி (ஆண்கள்)** - முதலாமிடம் - வாடியடி மத்திய நண்பர்கள் விளையாட்டுக் கழகம், இரண்டாமிடம் தம்பிராய் அண்ணா விளையாட்டுக்கழகம்.

**கபடி (பெண்கள்)** - முதலாமிடம் தம்பிராய் அண்ணா விளையாட்டுக்கழகம், இரண்டாமிடம் வாடியடி மத்திய நண்பர்கள் விளையாட்டுக் கழகம்.

(தொடரும்)

## தம்புள்ள மைதானத்தில் சர்வதேச கிரிக்கெட்போட்டிகள்
### அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு



(கொழும்பு)

அடுத்துவரும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் பலவற்றை தம்புள்ள விளையர்ட்டரங்கில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமென விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வாய்மூல பதிலுக்காக கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலாகவே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ரங்கிரி - தம்புள்ள வின்ளயாட்டரங்கில் நீண்ட நாட்களாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை. அந்த விளையாட்டரங்கில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கான திட்டம் எதுவும் வகுக்கப்பட்டுள்ளதா என ஜயசேகர கேள்வி எழுப்பினார். 2010 இல் ஆசிய கிண்ண போட்டிகள் நடத்தப்பட்டதை சுட்டிக் காட்டிய அமைச்சர், இனிவரும் காலங்களில் பல போட்டிகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## ரெனிஸ் மைதானம் அமைப்பு; ஆளுநருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ரெனிஸ் விளையாட்டுத்திடல் அமைப்பது தொடர்பாக யாழ். மாவட்ட ரெனிஸ் சம்மேளன அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் உப செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது விளையாட்டுத் திடல் அமைப்பதற்கென ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட இடங்களை ஆராய்ந்து ஆய்வறிக்கையை மிக விரைவில் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் யாழ். மாவட்ட ரெனிஸ் சம்மேளனத்திடம் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் வட மாகாண ஆளுநரின் செய



லாளர் இ.இளங்கோவன், விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.ரூபசிங்கம் மற்றும் யாழ். மாவட்ட ரெனிஸ் சம் மேளனத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# போக்குவரத்துக் கட்டணங்கள் ஒரு வருடத்திற்கு அதிகரிக்காது

## போக்குவரத்து அமைச்சர்



(கொழும்பு)

அடுத்துவரும் ஒரு வருட காலப் பகுதிக்குள் எதுவித பேருந்து கட்டண உயர்வும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பேருந்துக் கட்டணம் இருபது சதவீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ள போதிலும் அது பொது மக்களைப் பாதிக்கவில்லை.

பொதுமக்கள் இரு மடங்கு கட்டணத்தை கொண்டிருக்கும் சொகுசு பேருந்துகளில் பயணிப்பதற்கு முண்டியடிப்பது இதற்கு நல்ல உதாரணம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை உயர்வைத் தொடர்ந்து பேருந்து கட்டணமும் இருபது சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் அடுத்துவரும் ஒருவருட காலத்திற்கு எதுவித கட்டண உயர்வையும் மேற்கொள்ள கோரமாட்டோம் என பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினர் உறுதியளித்துள்ளனர்.

அந்த இணக்கப்பாட்டுக்கு ஏற்பவே இக்கட்டண உயர்வுக்கு இடமளிக்கப்பட்டது. ஆனால் எதிர்வரும் ஜுலை மாதம் வருடாந்த பேருந்துக் கட்டண உயர்வு இடம்பெறாது. அதற்கும் சேர்த்தே இப்போது கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களின் மீள்குடியமர்வு பாரபட்சம் எதுவும் இருக்காது

(கொழும்பு)

முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் பாரபட்சம் காட்டப்படாது இருக்கும் எனவும் இந்திய வீடமைப்பு திட்டத்தில் முஸ்லிம்களுக்குத் தேவையான அளவில் வீட்டுத்திட்டத்தை ஒதுக்குவதற்கு பிரித்தானியாவில் உள்ள இந்தியத் தூதுவருடன் கலந்துரையாடுவதாகவும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தார்கள் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ்பாரூக் தெரிவித்தார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக்கின் வேண்டுகோளுக்கிணங்க வவுனியாவிற்கு வருகை தந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் பிரதேச செயலாளர்களைச் சந்தித்தபோதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளின் வசதிகள் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மார்க் துக்கான், ஜேம்ஸ் வர்டுன் மற்றும் பிரித்தானிய அரசின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## 24 புள்ளிகளைக் கடந்தால் சாரதி அனுமதிப் பத்திரம் இரத்து

(கொழும்பு)

வீதி விதிமுறைகளை மீறும் சாரதிகளின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் மோட்டார் வானகச் சட்டத்தின் கீழான சில விதிமுறைகள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

அதற்கமைய எந்தவொரு சாரதியும் தவறிழைக்கும் பட்சத்தில் அந்தத் தவறுக்காக புள்ளி வழங்கும் திட்டமொன்றும் இதன் கீழ் அடங்குகிறது.

இந்த விதிமுறையின் கீழ் இரண்டு வருட காலத்திற்கு குறித்த சாரதி 24 புள்ளிகளைக் கடந்தால் அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தை இரு வருட காலத்திற்கு இரத்துச் செய்வதற்கு மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கும் அதன் காரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமைக்கும் அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நீர்கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் முற்பகல் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த உறுப்பினர்கள் கழுத்தில் கறுப்புப்பட்டி அணிந்திருந்ததுடன், எதிர்ப்பு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர். அத்துடன் அவர்கள் கோசங்களையும் எழுப்பினர்.

ஆயினும் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினரை சுலோக அட்டைகளுடன் சபைக்குச் செல்லவிடவில்லை.

நீர்கொழும்பு மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெற இருந்த வேளையில் அதற்கு முன்னதாகவே , எதிர்க்கட்சியினர் இந்த எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

## ராஜசிங்கனின் ஊன்றுகோல்

(கொழும்பு)

இலங்கையின் கடைசி அரசனான சிறிவிக்ரம இராஜசிங்க பயன்படுத்தியதாக நம்பப்படும் அலங்கார ஊன்றுகோல் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மெனிக்கின்ன பகுதியைச் சேர்ந்த ஒருவர் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு இந்த அலங்கார ஊன்று கோலை விற்க முயன்றபோதே இது பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

இந்த அலங்கார ஊன்று கோல இனங்காண முடியாத உலோகத்தினால் தயாரிக்கப்பட்டிருப்பதுடன், அதில் விலையுயர்ந்த கற்களும் பதிக்கப்பட்டிருந்தன. 3 ½- அடி நீளத்தையும் 10 கிலோகிராம் எடையையும் இந்த அலங்கார ஊன்றுகோல் கொண்டுள்ளது. இந்த அலங்கார ஊன்றுகோலின் குமிழ் வடிவ நடுப்பகுதியில் பலவித கோலங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

மத்திய பிரிவு குற்றப்புலனாய்வு அதிகாரிகள் இந்த ஊன்று கோலை கொள்வனவு செய்யும் பாணியில் சென்று இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

எனினும், இராணுவ அதிரடிப்படை வீரரொருவர் இந்த இடத்திலிருந்து தப்பித்துக் கொணடதாகவும் அவர் கைது செய்யப்படுவதை தவிர்ப்பதற்காக மறைந்துள்ளாரெனவும் சந்தேக நபர் கூறியுள்ளார்.

# "மக்களின் ஆவணம்" கையெழுத்து வேட்டை



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு எதிராக கையெழுத்துச் சேகரிக்கும் வேலைத்திட்டமொன்றை வடக்கு, கிழக்கில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பித்துள்ளனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் நாடாளுமன்றம் ஏற்பாடு செய்துள்ள "தாய் நாட்டிற்கு எதிராக வெளிநாட்டுச் சக்திகளை தோற்கடிப்போம்" எனும் தொனிப் பொருளில் "மக்கள் ஆவணம்" எனும் செயற்பாட்டின் கீழ் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த கையெழுத்து வேட்டை கடந்த வியாழக்கிழமை காலை மன்னார், கல்முனை, மட்டக்களப்பு உள்ளிட்ட பல இடங்களில் நடைபெற்றன. குறித்த வேலைத் திட்டம் நேற்றுமுன்தினம் முதல் இன்று சனிக்கிழமை வரை இடம் பெறவுள்ளது.

# ஆலயத்தில் பசு இறக்கக்கூடாது

(கொழும்பு)

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் கன்று ஈனுவதற்கிருந்த ஆலய பசு, சுகவீனமுற்று இறக்கும் தருவாயில் இருந்தது. அதனாலேயே அந்தப் பசுவை வத்தளை பிரதேசத்திலுள்ள பண்ணையொன்றில் வைத்து பராமரித்தோம். இருப்பினும் அது அங்கு இரண்டு தினங்களேனும் உயிரோடு இருக்கவில்லை.

சுகவீனம் காரணமாக இறந்து வட்டது. ஆனால் அந்தப் பசுவை இறைச்சிக்காக விற்றோம் என்று எம் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். இக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தின் தர்மகர்த்தாவும் நாடாளுமன் உறுப்பினருமான டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் கன்று ஈன்றுவதற்கிருந்த பசு, சுகவீனமுற்ற காரணத்தினால் இறைச்சிக்காக விற்கப்பட்டதாக மிருகங்கள் காப்பக சங்கத்தினரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் குறித்து கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த பசுவின் ஆயுட்காலம் முடிந்துவிட்டதை மிருக வைத்தியர்கள் மூலம் அறிந்துகொண்ட நாம், ஆலய வளாகத்துக்குள் அந்தப் பசு இறந்துவிடக் கூடாது என்பதற்காகவே வத்தளை பிரதேசத்திலுள்ள பண்ணையொன்றில் வைத்து பராமரித்து வந்தோம்.

ஆலயப் பசு என்பதால் அதனை நெற்கள் மீது வைத்து அதற்குரிய மரியாதையுடன் கவனித்து வந்தோம். அத்துடன், அந்தப் பசுவுக்கான சிகிச்சைகளை மிருக வைத்தியர்கள் இருவர் தொடர்ந்தும் வழங்கிக்கொண்டே வந்தனர். இருப்பினும் அந்தப் பசு குறித்த பண்ணைக்கு கொண்டு செல்லப்பட்டு ஒன்றரை நாட்களேயான நிலையில் இறந்துவிட்டது என்றார்.

# நெல்லை பல்கலைக் கழகத்தில் இலங்கை பேராசிரியைக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

தமிழகத்தில் நெல்லை பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கில் பங்கேற்கச் சென்ற இலங்கை பெண் பேராசிரியைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோஷம் எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் குற்றவியல்துறை சார்பில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கருத்தரங்கு நடந்தது. 'போதைப் பழக்கமும், குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களும்' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியை ஜீவா நீரல்லா, இங்கிலாந்தின் லங்காஷயர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியை ஹெலன்காட் உள்ளிட்ட பெண் பேராசிரியைகள் பங்கேற்றனர்.

கொழும்பு பல்கலை பேராசிரியை ஜீவா நீரல்லா, இலங்கையில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நடக்கவில்லை என்றும் அவ்வாறு நடப்பதாக சித்தரிப்பது சரியல்ல என்றும் பேசியதாகக் கூறப்படுகிறது.

இலங்கை பேராசிரியை பங்கேற்பது குறித்து ஏற்கனவே தெரிந்திருந்த நெல்லையைச் சேர்ந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் சேவியர் தலைமையில் பல்கலையின் கருத்தரங்கு அரங்கிற்குள் புகுந்துள்ளனர்.

'இலங்கை பேராசிரியை வெளியேறு' என்ற கோஷங்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்ததும் பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டதுடன் எதிர்ப்பாளர்களுடன் பொலிஸார் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டனர். பேராசிரியை ஜீவா நீரல்லாவை உடனடியாகப் பாதுகாப்புடன் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.



## தேர்த் திருவிழா

(வேலணை)

யாழ். கன்னாதிட்டி காளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று முன் தினம் வெகு சிறப்பாக நடை பெற்றுள்ளது.

இரதோற்சவ விழாவில் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலி ருந்தும் பெருந்தொகையான மக கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஆலயத் திருவிழாவில் கலந்து கொண்டவர்களுக்கு பல தாக சாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு தாக சாந்தி அளிக் கப்பட்டதுடன் அன்னதானமும் வழங்கப்பட்டது. (05)

## பெற்றுக்கொள்ளவும்

பொதுமக்களால் இதுவரை உரிமைகோரப்படாத துவிச்சக் கரவண்டி 01, EPJF 5135 இலக்க ஆட்டோ -01 ஆகியன கோப்பாய் பொலிஸாரால் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட் டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். உரிமை கோரத் தவறும் பட் சத்தில் அரசுடமையாக்கப்படும் என பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# கருச்சிதைவைச் சட்டபூர்வமாக்க நிபுணர்களின் கருத்துக்கள் வரவேற்பு

(கொழும்பு)

வல்லுறவுக்கு ஆளாகியவர் களுக்கு கருச்சிதைவை சட்ட பூர்வமானதாக்கும் வகையில் சட்டத்தை திருத்துவது பற்றிய நிபுணர்களின் கருத்துக்களை வரவேற்பதாக சிறுவர் அபி விருத்தி மற்றும் பெண்கள் வலு வூட்டல் அமைச்சரான திஸ்ஸ கரலியத்த நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நீதிமன்ற முறைமை மற்றும் வைத்திய நிபுணர்களை இவ் விடயத்தில் தமது ஆதரவை வழங்க வேண்டும். சமயக் குழுக்கள் இதனை எதிர்க்கக்கூடு மாயினும் வல்லுறவு காரணமாக கர்ப்பமுற்றவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த விடயம் கருதப்படல் செய்யப்பட வேண்டும்.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச் சின் தகவல்படி இலங்கையில் கருச்சிதைவு செய்யும் பெண்க ளில் 90 சதவீதமானோர் திரு மணமானவர்களாக உள்ளனர். தமக்கு ஏற்கெனவே குழந்தை கள போதுமென எண்ணு வோரும் தம் கடைசிப்பிள்ளை நிறைகுறைவாக உள்ளது எனக் கருதுவோரும் கருச்சிதைவு செய்துகொள்ள தீர்மானிக்க வுள்ளனர். போதிய வருவாய் இன்மையும் உழைப்புக்காக வெளிநாடு செல்வதும் 20 சத வீதமான கருச்சிதைவுக்கு கார ணமாக உள்ளது. 47 சதவீத மான கருச்சிதைவுக்கு காரண மாக விவாகரத்து உள்ளது.

குறைந்தபட்சம் நாளொன் றுக்கு மூன்று சிறார்கள் வல்லுற வுக்குள்ளாக்கப்படுகின்றனர். 2011 ஆம் ஆண்டில் 1636 சிறார் கள் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டுள்ளனர் என்றார்.

அமைச்சின் அறிக்கையின் படி, அநுராதபுரம், பொலன்ன றுவை மற்றும் இரத்தினபுரி பகுதிகளில் கூடுதலான வல் லுறவுகள் இடம்பெற்றுள்ளன. பாதிக்கப்பட்டவர்களில் 87 சத வீதமானோர் வயது குறைந்த பெண் பிள்ளைகள் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## மதுபோதையில் சாரதி செலுத்தினார் அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் மதுபோதையில் வாகனம் செலுத் திய நபருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத துமாறு தீர்ப்பளித்தார். (கே)

# கொழும்பு மகசீன் சிறையில் தொலைபேசிகள் மீட்பு



(கொழும்பு)

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் திடீரென நடத் தப்பட்ட தேடுதல் நடவடிக்கை யின் போது பல கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட் டுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள் ளார்.

வெளிநாடுகளுக்கு பேசக் கூடிய அதி நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய, 13 நவீன ரக கையடக்கத் தொலை பேசிகளும் இதன்போது மீட் கப்பட்டுள்ளன என்றார்.

சில வாரங்களுக்கு முன்னர் அனுராதபுர சிறைச்சாலையிலும் இவ்வாறு அதி நவீன கைய டக்கத் தொலைபேசிகள் மீட் கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# பயங்கரவாத தடைச்சட்டக் கைதி யாழ். மேல் நீதிமன்றால் விடுதலை



(திருநெல்வேலி)

பயங்கரவாதத் தடைச் சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட் டிருந்த இளைஞர் ஒருவர் இனறு முன் தினம் மேல் நீதி மன்றத்தினால் விடுதலை செய் யப்பட்டார்.

முல்லைத்தீவு, முள்ளிய வளை, கணுக்கேணி கிழக்கைச் சேர்ந்த ராஜரஞ்சிதன் ரஜிந்தன் (வயது -24) என்பவர் வவுனியா முகாம் வலயம் நான்கில் இருந்த போது 07.07.2009 இல் கைது செய்யப்பட்டு பூசா முகாம், நான்காம் மாடியிலும் பின்னர் வெலிக்கடைச் சிறைச் சாலையிலும் தடுத்து வைக்கப் பட்டிருந்தார்.

இவர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மூன்று குற்றங்கள் சுமத்தப்பட்டு பின்னர் 13.12.2011 இல் யாழ். மேல் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்று மீண்டும் யாழ். மேல் நீதிமன்றத்தில் விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இவருக்கு எதிரான சான றாக இவர் கைப்பட எழுதிய குற்ற ஒப்புதல் வாக்குமூலமே இருந்தது.

எதிரியின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தவரிடமும், எதிரி யிடமும் எதிரியின் சட்டத்தரணி யினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

இதன்போது சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய யப்படவில்லை என நிரூபிக்கப் பட்டது. எதிரிக்கு எதிரான வேறு சான்றுகள் இல்லை என அரச தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வ நாதன் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்து எதிரியை விடுதலை செய்து தீர்ப் பளித்தார்.

எதிரியின் சார்பில் சட்டத் தரணி மு.றெமீடியஸ் ஆஜரா னார். அரச தரப்பில் அரச சட்ட வாதி வி.திருக்குமரன் ஆஜராகி யிருந்தார். (137)

# 7 போத்தல் கசிப்பிற்கு 40 ஆயிரம் அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - விசுவமடுப் பகுதியில் 7 போத்தல் கசிப்பை வைத்திருந்த நபருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை கடந்த 5 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலி ஸார் கைதுசெய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி பெ.சிவ குமார் குறித்த நபருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது டன் செலுத்தத்தவறின் 4 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (கே)

# வடக்கின் வசந்தத்தில் வடமராட்சிக்கு குடிநீர்

(பருத்தித்துறை)

வடக்கின் வசந்தம் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பகுதி யிலிருந்து வல்வெட்டித்துறை வரையான பிரதேசத்திற்கு குடிநீர் வசதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடக் கின் வசந்தம் துரித அபிவிருத்தி திட்ட பொறியியலாளர் தெரிவித் துள்ளார்.

நேற்று பருத்தித்துறை பிர தேச செயலகத்தில் நடைபெற்ற வடக்கின் துரித அபிவிருத்தித் திட்டம் (என்றிப்) தொடர்பான கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குடிநீர் திட்ட வேலைகளுக் கென வடக்கின் வசந்தம் திட்டத் தினால் 248 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் சுமார் 23 கிலோ மீற்றர் தூரம் வரை குடிநீருக் கான குழாய் பொருத்தப்பட வுள்ள நிலையில் இதுவரை 12 கிலோ மீற்றர் பகுதி வரை குழாய் பொருத்தும் வேலை கள் முடிவடைந்துள்ளது.

இதனடிப்படையில் இவ் வேலைத்திட்டத்தில் 28 வீதமான வேலைகள் முடிவடைந்துள்ள நிலையில் இதன் முழுவேலை களும் ஆடி மாதத்திற்குள் செய்து முடிக்கப்படவேண்டும். இதன் பின்னர் இப்பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதைவிட ஏற்கனவே 12 திட் டங்களுக்கென 433 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றில் இதுவரை 133 மில்லியன் ரூபா நிதிக்கான வேலைகளே முடிவடைந் துள்ளது.

ஏனைய வேலைத்திட்டங்கள் விரைவில் பூர்த்தியாக்கப் படவேண்டும் என ஒப்பந்தக் காரா களுக்குப் பணிக்கப்பட்டுள்ள தாக அவர் மேலும் தெரிவித் தார். (109)

# ஓய்வூதியர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத் துக்குட்பட்ட ஓய்வூதியர்களுக் கான ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். கொக்கு வில் இந்துக் கல்லூரியின் பிர தான மண்டபத்தில் நடைபெறு மென அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்க வேண்டுமென செயலாளர் அறிவித்துள்ளார்.

தலைவர் சா.பீதாம்பரம் தலை மையில் நடைபெறும் இவ் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனனும் ஏனைய விருந்தினர் களாக ஆர்.சிவரூபன், வி.சிறி சக்திவேல் மற்றும் பொ.கமல நாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெற இருப்பதால் சகல ரும் தவறாது சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளனர்.



புத்தூர் - வாதரவத்தை மக்கள் முன்வைத்த கோரிக்கைக் கிணங்க மக்களின் நீர்ப்பிரச்சினை தொடர்பாக வலி. கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் இ.ஜங்கரன் அப்பிரதேச மக்களுடனும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை உத்தி யோகத்தருடனும் கலந்துரையாடுவதை காணலாம். (35)

## இளைஞர் சேவை மன்றக் கிளைகள்

(முழங்காவில்)

பூநகரி பிரதேச செயலர் பிரி வில் உள்ள சகல கிராமங்களி லும் தேசிய இளைஞர்சேவை மன்றக் கிளைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இதுவரை 15 கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவதாகவும், தேசிய இணை சேவை மன்றங்களுக்குப் பொறுப்பான அலுவலர் தெரி வித்தார்.

வடக்கு, தெற்கு இதயங் களை இணைக்கும் வேலைத் திட்டத்தின் அடிப்படையாக மூன்று இளைஞர்களும் பிரதேச செயலகத்திலும் இலவச சிங்கள வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாகவும் தெரி விக்கப்படுகிறது. (112)

# சிசு மரண விசாரணை அறிக்கை திங்கட்கிழமை வெளியாகும்

(கொழும்பு)

மகாமோதர வைத்தியசாலை யில் அண்மையில் ஏற்பட்ட சிசு மரணம் தொடர்பான ஆய்வு அறிக்கை எதிர்வரும் திங்கட் கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள தாக சுகாதார அமைச்சர் மைத் திரிபால சிறிசேன இன்று நாடா ளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ வாய்மூல பதிலுக்காக முன் வைத்த கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

குறிப்பிட்ட வைத்தியசாலை யில் ஜனவரி முதல் இன்று வரை 18 சிசு மரணங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இதற் கான விசேட காரணங்கள் ஏதும் உண்டா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ள விசேட மருத்துவ நிபுணர் குழுவொன்று நியமிக் கப்பட்டுள்ளது. அவர்களின் ஆய்வு அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை கிடைக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித் தார்.

# இஸ்ரேலிய யூதர்களிடம் உள்ளதும் – ஈழத்தமிழரிடம் இல்லாததும்

-லோகன் பரமசாமி கட்டுரையிலிருந்து-

உலகில் உள்ள ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள அரசாங்கங்களின் கொள்கைகளில் தமது செல்வாக்கை செலுத்தும நோக்குடன் தமது நலன்களை அடிப்படையாக கொண்டு கணிசமான அளவு தனிப்பட்டவர்களும், குழுக்களும், சமூகங்களும் செயற்படுகின்றனர்.

இந்த செயற்பாடுகள் அந்தந்த நாடுகளின் உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகளில் மாற்றங்களை கொண்டு வருவதறகாகவோ அல்லது ஏற்கனவே இருக்கும் சாதகமான போக்கில் மாற்றங்களை ஏற்பட்டு விடாது கண்காணித்துக் கொள்வதற்கான நோக்கம் கொண்டதாகவோ இருக்கலாம்.

இந்த தனிப்பட்டவர்களும் குழுக்களும சமூகங்களும் 'தாம் வாழும் நாட்டில் தமது கஞநாயக பலத்தினூடாக இடைவிடாது' தமது செல்வாக்கை நிச்சயம் செய்து வருகின்றனர்.

தமிழ் மக்கள், தற்போதைய தமது அரசியல் தலைமை தமது உண்மையான அவாக்களை பிரதிபலிப்பதாக இல்லை என நினைப்பதாக, சில தமிழ் சிந்தனையாளர்கள் கருதுகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைபபின் கூட்டத்தொடரில், தமது உண்மையான அவாக்கள் என்பது பாதுகாப்பான சுதந்திரமான வாழ்க்கையே என்பதை எடுத்துச் சொல்ல அரசியல் ரீதியாக தாம் தேர்வு செய்த பிரதிநிதிகள் முன் வருவார்கள் என தமிழ் மக்கள் எதிர் பார்த்திருந்தனர். ஏமாந்துள்ளனர்.

இந்நிலையில் காலாகாலம் அரசியல் வாதிகளின் வெற்றுப் பேச்சுகளிலும் வெற்றுத் தோற்றத்திலும் தமது நம்பிக்கையை வைத்திருக்கும் தமிழர்களிடம் இல்லாத விடயங்கள் எவற்றை இஸ்ரேலிய யூதர்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை பார்க்கலாம்.

இஸ்ரேலிய யூத இனத்தவர்கள் அரசியல்வாதிகளின் வெற்றுப்பேச்சிலும் பார்க்க தமது சொந்த செயற்பாட்டிலும், கருத்தாதரவு நடவடிக்கைகளிலும், யூத இன அறிஞர்களின் அறிவுசார் விளக்க உரைகளிலுமே அதிக நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

காலா காலம் பதவியேற்கும் அமெரிக்க அரசாங்க நிர்வாக குழுக்களின் மத்தியில் யூதர்கள் தமது கருத்தாதரவு மூலம் எண்ணிய வகையில் காரியங்களை சாதித்து வருகின்றனர். இந்த கருத்தாதரவை உருவாக்கும் இஸ்ரேலிய ஆதரவு குழுக்களும், தனிப்பட்டவர்களும் அமெரிககாவும் இஸ்ரேலும் உலகளாவிய நிலையில் ஒரே நோக்கை கொண்டன என்பதை ஆணித்தரமாக கூறிவருவதே தனித்துவமானதாகும்.

ஒட்டு மொத்தமாக யூதர்களின் கருத்தாதரவு என்பது, அமெரிக்க வெளியுறவு கொள்கையும் இஸ்ரேலின் நலன்களும் ஒத்ததாக முன்னேறுகிறது என்பதை எப்பொழுதும் மிக ஆழமாக உற்று நோக்கிக் கொண்டிருப்பது தான் அமெரிக்கா வாழ் யூதர்களின் பிரதான கடமையாக தெரிகிறது.

வேறு எந்த ஒரு நாட்டிலும் இன்னுமோர் நாட்டின் இனக்குழுமம் இந்த அளவு ஆழமான ஆர்வமும் மிக விரிவான பங்காற்றலும் கொண்டது கிடையாது என்று கூறுமளவுக்கு யூதர்கள், அமெரிக்க வெளியுறவு கொள்கை வகுப்பாளர்களின் செயற்பாட்டிற்குள் ஆழ ஊடுருவி உள்ளனர்.

இரண்டாம் உலகப்போரின்போது நாஸிகளின் இனவழிப்பிற்குள் சிக்குண்டு வதை பட்டு வெளியேறிய யூத இனத்தவர்களுக்கு 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற தமது தேசம் பாலஸ்தீனத்தில் உருவாகியது பெருமையையும் ஆர்வத்தையும் உண்டுபண்ணியது.

தமது மண்ணில் எழுந்திருந்த பொருளாதார தேவையையும் அரசியல் கட்டமைப்பு உதவிகளையும் ஒவ்வொரு யூதனும் உணர்ந்து செயலாற்றினான். அமெரிக்காவிலே யூதர்களுக்கு சொந்தமான புதிய நிறுவனங்கள் உருவாகின. 1981ஆம் ஆண்டிலே இஸ்ரேலிய சார்பு கருத்தாதரவு குழுக்கள் சுமார் 75 ஆக இருந்தது.

இந்த குழுக்களின் செயற்பாடுகள் இஸ்ரேலிய ஆதரவு வேட்பாளர்களுக்கு வாக்கு வேட்டையில் ஈடுபடுவதற்கும் அப்பால் அமெரிக்க இஸ்ரேலிய பொது நலன் கொள்கை பரப்புரைகளில் மிக முனைப்புடன் பங்காற்றுவதாக இருந்தது.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கையையே கவனத்தில் கொண்ட யூதர்கள் பல்வேறு சமூக நிறுவனங்களை உருவாக்கினர்.

யூதர்களின் கருத்தாதரவு செயற்பாடுகளில் குறிப்பாக அமெரிக்காவிலே சிந்தனை குழுக்களின் செயற்பாடுகள் மிக முக்கிய பங்களிப்பு செய்கின்றன.





இந்த சிந்தனை குழுக்கள் ஆய்வறிக்கைகள் வெளியிடுதல், முக்கிய மகாநாடுகளை நடத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கு அப்பால் இவை இலாபநோக்கம் இல்லாத சிந்தனை குழுக்களாக இயங்குகின்றன.

பல்வேறு துறைகளையும் கொண்ட யூத இனத்தை சேர்ந்த அனுபவசாலிகளும் பேராசிரியர்களும் துறைசார் வல்லுனர்களும் தமது சொந்தக் கட்சி பேதங்களை விடுத்து அறிவுசார்ந்த முறையில் இந்த நிறுவனங்களின் ஊடாக மிக உயர்ந்த பணிகளை செய்து வருகின்றனர். இதில் முன்னைநாள் இராஜதந்திரிகளும், இராணுவ உயர் அதிகாரிகளும், விஞ்ஞானிகளும் அடங்குகின்றனர்.

உண்மையில் இஸ்ரேல் என்ற நாடும் அதன் உயிர் வாழ்க்கையும் இன்னமும் சிந்தனையாளர்களினதும் கருத்தாதரவு குழுக்களினதும் கைகளிலேயே பெருமளவில் தங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

## அண்ணாத்துரை



திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய அண்ணாத்துரை அவர்களை நேரில் பார்த்திராத இன்றைய தலைமுறையினருக்கு... ஒரு கட்டுரையில் இரா.நெடுஞ்செழியன், தங்கள் தலைவரை இப்படி சித்தரிக்கிறார்....

குள்ள உருவம்... குறும்புப் பார்வை... விரிந்த நெற்றி... பரந்த மார்பு... கறை படிந்த பற்கள்!

கவலையில்லாத தோற்றம், நறுக்கப்பட்ட மீசை, நகை தவழும் முகம், சீவாத தலை, சிறிதளவு வெளி வந்த தொப்பை.

செருப்பில்லாத கால், பொருத்தமில்லாத உடைகள். இடுப்பில் பொடிமட்டை, கையில் வெற்றிலை பாக்குப் பொட்டலம். இந்தத் தோற்றத்தோடு அதோ காட்சி அளித்து நிற்கிறாரே... அவர் தான் அண்ணாத்துரை!




இருபது வருடங்களுக்கு முன்னர் நான் பாகிஸ்தானில் வேலை செய்த காலத்தில் முதன்முதலாக செல்பேசி அங்கே அறிமுகப்படுத்தப்பட்டது. ஒன்றின் விலை ஆயிரம் டொலருக்கு மேலே. என்னிடம் ஒன்றிருந்தது. இடது கையால் தூக்க முடியாது. அத்தனை பாரம். ஆறு மணி நேரத்துக்கு ஒரு



தடவை மின்னேற்ற வேண்டும். அப்படியும் பேசும்போது அடிக்கடி தொடர்பு அறுந்துவிடும். சில இடங்களில் இருந்து எவ்வளவு முயன்றாலும் தொடர்பு கிடைக்காது. அது ஒரு காலம்.

அதற்குப் பிறகு பல செல்பேசிகள் வந்து போய்விட்டன. இரண்டு செல்பேசிகளை நான் தொலைத்திருக்கிறேன். என் நண்பர் ஒருவர் ஐந்து செல்பேசிகளைத் தொலைத்திருக்கிறார். ஏனென்றால் அவை தொலைப்பதற்கு வசதியாகத்தான் செய்யப்படுகின்றன.

சில வருடங்களுக்கு முன்னர் பிளாக்பெர்ரி செல்பேசி ஒன்று வாங்கினேன். அப்பொழுதே முடிவு எடுத்தாகிவிட்டது, இனிமேல் செல்பேசியை மாற்றுவதில்லை என்று. எனக்குத் தேவையான அத்தனை வசதிகளும் அதில் இருந்தன.

ஐபோன் வந்தபோது நண்பர்கள் ஐபோன் புகழ் பாடி என்னை மாற்ற முயன்றாலும் நான் மாறுவதாக இல்லை.

ஒருநாள் காலையில் நான் வெளியே போய்விட்டு வீட்டுக்குத் திரும்பியபோது கையில் புது ஐபோன் இருந்தது. மனம் மாறிவிட்டது. எல்லோரும் இவ்வளவு சொல்கிறார்களே, வாங்கிப் பார்ப்போம் என்று ஏதோ ஒரு துணிச்சலில் எடுத்த முடிவு. அதை வாங்கிய பின்னர் தான் தெரிந்தது, எத்தனை மகத்தான அனுபவத்தை அத்தனை நாளும் அனுபவிக்கத் தவறிவிட்டேன் 'என்பது.

முற்றிலும் பயனர்களை மனதில்கொண்டு தயாரிக்கப்பட்டது இந்த செல்பேசி. அவ்வளவு நட்பாக இருந்தது. என்னைப்போல தொழில்நுட்ப சூன்யத்துடன் செல்பேசி ஒன்று நட்பாக இருக்க முடியும் என்பது நம்பமுடியாத விசயம். இதிலும் மற்ற செல்பேசிகள் போல மின்னஞ்சல்கள் அனுப்புவது, பெறுவது, குறுஞ்செய்திகள், நாள் காட்டி, சந்திப்பு விவரங்கள், குறிப்புகள் என சகலதும் இருந்தன. ஆனால் தமிழிலேயே மின்னஞ்சல்கள், குறுஞ்செய்திகள் அனுப்பித் தமிழிலேயே பதில் பெறலாம் என்பது 'எத்தனை பெரிய பாய்ச்சல்.

கூகுளில் தேடுவது மிகவும் சுலபம். நீங்கள் தேடுவது நிமிடத்தில் கிடைக்கும். ஆனால் முக்கியமானது தமிழ் கூகுள். என்னால் நம்பவே முடியவில்லை. கையிலே ஒரு தமிழ் தேடு யந்திரத்தைக் கொண்டு செல்ல முடிவது எத்தனை பெரிய வசதி.

நான் ஒரு பயிற்சிக்காக முதலில் தேடியது முத்தொள்ளாயிரத்தில் எத்தனை பாடல்கள் மிஞ்சியிருக்கின்றன என்பதுதான்.

முத்தொள்ளாயிரம் என்றால் மூன்று தொள்ளாயிரம், 2700 பாடல்கள். ஆனால் எங்களுக்கு இப்போது கிடைத்திருப்பது 109 பாடல்கள்தான். இந்தத் தகவலை தமிழ் கூகுள் நிமிடத்தில் கண்டுபிடித்துக் கூறியது.

இந்த வெற்றியை யாருக்காவது காட்டவேண்டும் என்ற ஆவல் மீறியது. தொலைக்காட்சி தொடர் பார்த்துக்கொண்டிருந்த மனைவியிடம் செல் பேசியைக் காட்டினேன். விஞ்ஞானி மைக்கேல் ஃபாரடே இருநூறு வருடங்களுக்கு முன்னர் ஒரு கிறிஸ்மஸ் இரவு மோட்டாரைக் கண்டுபிடித்தார். மின்சாரம் சுருள்கம்பியில் ஓடியபோது அதற்குள் இருந்த காந்தம் துள்ளியது. மைக்கேல் ஃபாரடே வர்ணிக்க முடியாத இன்ப அதிர்ச்சியில் தன் மனைவியை அழைத்து அந்த அதிசயத்தைக் காட்டினார். அதற்கு அவர் "இதுதானா" என்று கூறினார். அதுபோல என் மனைவியும் "இதுதானா" என்றுவிட்டு மறுபடியும் தொலைக்காட்சி பெட்டிக்குப் போய்விட்டார்.

என்னை வசீகரித்த இன்னொரு அம்சம் திசைகாட்டியும், அதிலே உள்ள GPS (புவிநிலை காட்டி) வசதியும். நான் அடிக்கடி தொலைந்து போகிறவன். மிக இலகுவாக நான் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துவிடலாம். நீங்கள் போகவேண்டிய இடத்தைச் சொன்னால் அது எப்படிப் போவது என்று உங்களுக்குப் பாதை போட்டுத் தரும்.

நான் இருக்கும் வீட்டின் அகலக்கோடு, நீளக் கோடு 43 டிகிரி N, 79 டிகிரி W என்று வந்தது. அமெரிக்காவையும் கனடாவையும் பிரிக்கும் அகலக கோடு 49 டிகிரி N. அப்படிப் பார்க்கும்போது நான் அமெரிக்க எல்லைக்குள்ளேதான் வசித்தேன். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அமெரிக்க அரசாங்கம் என்னிடம் வருமானவரி கட்டவேண்டும் என வற்புறுத்தாவிட்டால் சரி.

உங்களுக்குத் தேவையான பாடல்களை இணையத்திலிருந்து இறக்கி, பதிந்துவைத்துக் கேட்டுக்கொள்ளலாம். நான் பதிந்து வைத்த முதல் பாட்டு, எனக்கு மிகவும் பிடித்தமான 'அமைதியில்லா என் மனமே' பாடல். பாதாள பைரவி படத்தில் கண்டசாலா பாடியது. அந்தப் பாடல் என்னுடனேயே எப்பவும் இருந்து மனதை அமைதிப்படுத்தியது.

சி.என்.என்., பி.பி.சி. போன்ற சனல்களில் என்ன செய்தி என்று அடிக்கடி பார்த்துக் கொள்ளலாம். கூட்டங்களில் பேச்சாளர் பேசும் பேச்சை அப்பொழுதே பதிவு செய்து வைத்துக் கொள்ளலாம். தொலைபேசியில் நேர்காணல் செய்யும்போது அதையும் பதிவு செய்யலாம். புகைப்படங்களோ, காணொளிப் படங்களோ எடுத்து உடனுக்குடன் உலகம் முழுவதும் அனுப்பலாம். இணையத்திலும், முகப்புத்தகத்திலும் இடலாம். முக்கியமானது, பார்வை இல்லாதவர்கள் தகவல்களைக் குரலிலே பரிமாறிக் கொள்ளலாம். தாங்கள் அனுப்பவேண்டிய கடிதங்களைக் குரலிலேயே பதிந்து அனுப்பி பதிலையும் குரலிலே பெற்றுக்கொள்ளலாம். செய்யவேண்டியதெல்லாம் ஒன்றிரண்டு பட்டன்களை அழுத்துவதுதான்.

எனக்குப் பிடித்த அதிநவீன கண்டுபிடிப்பு, முகம் முகமாகப் பேசுவது. நீங்கள் அழைத்தவர் ஐபோன் பயனாளர் என்றால் அவர் முகத்தை நீங்களும் உங்கள் முகத்தை அவரும் பார்த்துக்கொண்டே பேசலாம். புதுக் காதலர்களுக்கு எத்தனை பெரிய வசதி?

அல்லாவிட்டால் ஸ்கைப் மூலம் இலவசமாகவும் பேசலாம். பில்களுக்குப் பணம் கட்டலாம். இணையத்தின் மூலம் பொருள்களுக்கு ஆணை கொடுத்து வாங்கலாம். உலகத்துக் கால நிலை, உலகத்து வித்தியாசமான நேரங்கள், உலகத்து சந்தை விவரங்கள் எல்லாமே விரல்நுனிக்கு வந்துவிட்டன. நீங்கள் மறந்துபோகக்கூடிய அலுவல் ஒன்றை அது ஞாபகமூட்டும். திடீரென்று மின்சாரம் துண்டிக்கப்பட்டால் ஓர் அவசர விளக்குகூட இருந்தது.

இந்த ஐபோனை உருவாக்கிய மேதை ஸ்டீவ் ஜொப்ஸ் எங்கள் வசதிக்காக எல்லாவற்றையும் தானே சிந்தித்து நுணுக்கமாகப் புகுத்தியிருக்கிறார். அவர் சொன்னார்: "பயனாளரிடம் அவருக்கு என்ன தேவை என்று கேட்கக்கூடாது. அவருக்கு என்ன தேவை வரும் என்பதை நாங்கள்தான் யோசித்துக் கண்டுபிடிக்கவேண்டும்."

அடுத்து என்ன? அனைத்துக் கடன் அட்டைகளும் செல்போனில் ஏறிவிடும். அடையாள அட்டை, சுகாதார அட்டை, குடியுரிமை அட்டை, கடவுச்சீட்டு, கார் ஓட்டும் லைசென்ஸ் போன்றவையும் அடங்கும. உங்கள் கைரேகைப் படமும் கண்ரேகை படமும் அதிலே சேமிக்கப்பட்டிருக்கும்.

செல்பேசியைக் காட்டி உலகப் பயணம் செய்யலாம். என்ன பொருளும் எங்கேயும் வாங்கலாம். எந்த மொழியில் பேசினாலும் புரிந்து பதிலும் கொடுக்கலாம். சாவிகள் ஒழிந்துவிடும். உங்கள் வீட்டுக் கதவை செல்பேசியைக் காட்டித் திறக்கலாம். செல்பேசியினால் காரை ஸ்டார்ட் பண்ணலாம். இப்படியான பெரும் வளர்ச்சிக்கு ஆரம்பம்தான் இந்த ஐபோன்.




# இம்சை... இனிமை... கவிதை...

எனக்கு கவிதையெல்லாம் எழுதும் பழக்கம் இல்லாததால் தொடர்ந்து நீங்கள் தைரியமாகப் பழக்கலாம். ஏன் நண்பர்களிற் சிலருக்கு கவிதை எழுதும் பழக்கமிருக்கிறது. பெரும்பாலும் அவர்களுக்கு உணர்ச்சிப்பிழம்பாகத் தெரியும் கவிதைகள் எனக்கு இம்சையாகவே இருக்கும். பெரும்பாலான வேளைகளில் அவர்கள் கவிதைகளில் இடம்பெறும் 'அவளையும்', 'நீயையும்' சபித்தவாறே உட்கார்ந்திருக்கிறேன். யார் எழுதிய கவிதையையும் "நல்லாவேயில்லையே" என்றுசொல்லும் தைரியம் இன்னும் வரவில்லை. ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதப்படுபவை எல்லாம் கவிதை அல்லவென்றும் அதுமளிகைக்கடை சிட்டையாகவும் கூட இருக்கலாம் என்றும் கூட சிலர் கவலைப்படுகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட கல்லுளி மங்கத்தனமான என்னைக்கூட சில கவிதைகள் ஆட்கொண்டிருக்கின்றன. அவற்றின் கவர்ச்சியே இந்தப் பத்தி...

பல வருடங்களுக்கு முன்பு வாசித்த வரிகள் கூட இன்றும் ஞாபகமாய்... இந்தியாவில் தொடர் இரயில் குண்டு வெடிப்பு நேரம் இப்படி ஒரு கவிதை வாசித்ததாக ஞாபகம்...

விபத்திலிருந்து தப்பியவள்
செய்தி கேட்டு
செத்துப் போனாள்...
குண்டு வைத்தவன்
மகனாம்...!

கவிதை என்றால் என்ன என்பதற்கு எனக்கு இன்னும சரியான பதில் தெரியவில்லை. மரபுக் கவிதைகளுக்கான இலக்கணங்கள் இறுக்கமாக இருந்தாலும் புதுக்கவிதைகள் சற்று சுதந்திரமானதாகவேபடுகிறது. கவிதைக்கு சந்தம் (Rhyme) பிரதானமானது என்ற நியதி முன்னர் இருந்து வந்தது. ஆனால் தற்போது எழுதப்படும் கவிதைகளின் சந்தங்கள் ஐயப்படக்கூடியதாகவே இருக்கின்றன. எனவே கவிதை என்பதற்கு 'வசீகரமான வரிகள்' என்று தற்காலத்தில் அர்த்தம் கற்பித்துக் கொள்ளமுடியும். இது சாரப்படவே Lyrics என்ற பதம் பாவிக்கப்படுகிறது. இது சுகிர்தராணியின் வசீகரமான வரிகள்.

இடமற்று நிற்கும் கர்ப்பிணியின்
பார்வை தவிக்க
பேரூந்துக்கு வெளியே பார்ப்பதாய்
பாசாங்கு. செய்யும் நீ
என்னிடம் எதை
எதிர்பார்க்கிறாய் காதலையா...?


இப்படி நச் என்று இருக்கம் குட்டிக் கவிதைகள் தான கொஞ்சம் பொறுமை குறைந்தவர்களையும் சட்டென்று வசீகரிக்கும். கவிஞர் வைரமுத்து கவிதைகளின் நீளம் குறித்து விமர்சிக்கும் போது 'கோவணம் என்பது சால்வை போல் இருக்கக்கூடாது' என்றார். ஆனால் இங்கு ஒரு சால்வை கூட மனதை தொடுகிறது. தீராநதியில் எழுதியிருந்த ராஜசேகருக்கு நன்றி.

சில சதுர அடிகளே ஆன
எங்கள் ஒண்டுக் குடித்தன கவலை
மகளை தீண்டுவதில்லை...
தனக்கான வீட்டை
அவள் வரைந்து கொள்கிறாள்
வரைந்த வீட்டின்
வண்ணக் கவலை முகத்தில்
ஒளியாய் வழிய தூங்கிப் போகிறாள்.
கொஞ்ச நேரமும்
கொஞ்ச வர்ணங்களும்
போதும் அவளுக்கு
வடிவங்கள் உயிர்பெற.

ஒரு சமயம் வெகுநேரம்
கழித்து எழுந்தவள்
தன் வீட்டில் குழந்தை நண்பர்களுக்கு
விருந்து வைத்ததாகச் சொன்னாள்
அப்போது தேவன் வந்து போனவராம்...
ஒரு மழை நாளில் வீடு வந்து சேர்ந்த
வெள்ளைப் பூனைக்குட்டியை விரட்டியபோது
அழுது விட்டாள்.
தன் புதிய வரைபட வீட்டில்
அதற்கு ஒரு அறை ஒதுக்குவதாக
தூக்கி அணைத்துக் கொண்டாள்
குழந்தைகளின் உலகத்தில்


சுகிர்தராணி


மஹாகவி


கண்ணதாசன்


பாலுமகேந்திரா

யாருக்குத்தான் இடமிருக்காமல் போகாது...

கவிதை என்ற இந்த வடிவத்தின் தாக்கம் அபாரமானது. சில சொற்களில் ஆழ்ந்த கருத்துக்களை ஆழமாக முன்வைக்கக்கூடிய சாகசம் நிறைந்தது. சில கவிதைகள் சில வரிகளிலேயே குறித்த கவிதைக்கான காட்சியை கண்ணுக்குள் கொண்டுவந்துவிடும்.

குளிர்கால காலைநேர புற்களும் அதன்மேல் பனித்துளியும் நாம் அனைவரும் அறிந்ததே... இதோ அது ஹைக்கூவாக...

வெளியே குளிரில்
புல்லுக்கு மட்டும்
வியர்த்தது எப்படி..?

நாட்டுப்புற பாடல்கள் கூட போகிற போக்கில் மனதை அள்ளக்கூடியன. பாசாங்கற்ற நிர்ச்சலமான வரிகளே அவற்றின் பலம்.

கந்தனைக் காணவென
கார்த்திகைக்கு வந்தேனடி...
உந்தனைக் கண்டேன்- இனி
ஊருக்குப் போகமாட்டேன்..!

நக்கல் நளினங்கள் கூட கவிதைகளில் குறைவில்லை. மகாகவியின் குறும்பா ஒன்று...

சொந்தத்தில் கார்; கொழும்பில் காணி
சோக்கான வீடு; வயல் கேணி
இந்தளவும் கொண்டு வரின்
இக்கணமே வாணியின் பால்
சிந்தை இழப்பான் தண்டபாணி...!

ஆரம்ப காலத்தில் பாட்டுக்கு மெட்டமைத்தார்கள். தற்காலத்தில் மெட்டுக்குப்பாட்டு எழுதுகிறார்கள். இசையமைப்பாளர்களின் சவாலான இசைக்குள் தமிழையும் கற்பனையையும் செருகவேண்டிய நிலை கவிஞர்களுக்கு. இந்த நிலையிலும் சில கற்பனைகள் பிரமிக்க வைக்கிறது. அண்மைய சில பாடல் வரிகள்...

முக்கோணங்கள் படித்தேன் - உன்
மூக்கின் மேலே
விட்டம் பற்றி படித்தேன்- உன்
நெஞ்சின் மேலே
மெல் இடையோடு வளைகோடு
நான் ஆய்கிறேன்...!

சில வரிகளின் கற்பனைகள் அவர்கள் கற்பனை மீது கொஞ்சம் பொறாமைப்பட வைப்பது மாதிரியாகவும் இருக்கும்....

வாசல் பெருக்கிப் போனாள்...
சுத்தமான வாசல்...
குப்பையானது மனசு...!

இது ஒரு உள்ளூர் கவிதை...

நாலாம் பிறை பார்த்தால்
நாய் பாடாப் பாடென்பர்
நானோ முழுநிலவை
பார்த்து விட்டு
அனு தினமும் அலைகின்றேன்..

கவிஞர்கள் பொதுவாகவே கொஞ்சம் இறுமாந்தவர்கள். வார்த்தைகள் வசமாவதும் உயர்ந்த கற்பனையும், தத்துவஞானமும், சந்தமாவதிலும், மிருகங்களிலிருந்து மனிதனை பிரதானமாக வேறுபிரிக்கும் மொழியை இலகுவாக ஆட்கொள்வதாலும் அவர்கள் பெருமை கொள்கிறார்கள். இது கண்ணதாசனின் இறுமாப்பு...

காதல் பெண்ணின் பெருந்தலைவன்
பாமர ஜாதியின் தனி மனிதன் - நான்
படைப்பதால் என் பெயர் இறைவன்.

உலகெங்கிலுமுள்ள தீவிரவாதத்தினால் பெருமளவு பாதிக்கப்படுவது அப்பாவி ஜனங்களும் குழந்தைகளுமே. 'வட்டங்கள்' என்ற தலைப்பிலான பாலுமகேந்திராவின் இந்த வரிகள் மூலம் அதன் நிதர்சனத்தை தரிசிக்க முடிகிறது.

அந்தக் குண்டின் சுற்றளவு
வெறும் முப்பது சென்டி மீற்றர்தான்
வெடித்தபொழுது
அதன் வீரியம்
மையத்திலிருந்து
ஏறத்தாழ ஏழு மீற்றர்தான்.
இந்த வட்டத்துள்,
இறந்து கிடந்தவர்கள் எட்டு
காயமடைந்தவர்கள் பன்னிரெண்டு
இவர்களை சுற்றி

நெஞ்சைப் பிளக்கும் சோகத்தாலும்
நிர்ணயமற்ற காலத்தாலுமான
ஒரு பெரிய வட்டத்துள்
இரண்டு ஆஸ்பத்திரிகள்
ஒரு சுடுகாடு...

நூற்றுச்சொச்சம் கிலோமீற்றர் தள்ளி,
சொந்த ஊரில் புதைக்கப்பட்ட
அந்த இளம் பெண்ணையும்
கணக்கில் கொண்டால்
கணிசமாக விரிவடையும்
மற்றொரு வட்டம்.

கடல்களுக்கப்பால் எங்கோ ஓர் மூலையில்
இவளுக்காய் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும்
அந்த ஒற்றை மனிதனால்
உலகளவாய் உருமாறும் இன்னொரு வட்டம்
சொர்க்கத்தில் இருப்பதாக சொல்லப்படும்
கடவுளின் கதவு வரை சென்று
அவல ஓலமிடும்
அநாதையாக்கப்பட்ட
அந்தக் குழந்தையின் அழுகுரல் போடும்
அண்டங்களைக் கடந்த
கண்ணீரும்
கணக்குகளுமில்லாத
வேறொரு வட்டத்தைப் பற்றி
நான் சொல்லப் போவதில்லை.

ஏ.கே

# மரம் வெட்டுவதும் மரம் நடுவதும் சரியா?

- எஸ். இளங்கோவன் -

தறபோது எங்கு நோக்கினும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம். மரம் வளர்ப்போம், மழை பெறுவோம், புவி வெப்பமயமாதல், பசுமைக் குடில் வாயுக்கள் என்றெல்லாம் முழக்கங்கள் - தொடரோட்டங்கள். திடீர் திடீரென மரம் நடுவிழாக்கள்.

ஆனால் உண்மையில் நடப்பதென்ன? எங்காவது யாராவது நட்ட மரம் வளர்ந்ததைப் பார்த்துள்ளோமா? அல்லது நாமாவது ஒரு மரமாவது நட்டு வளர்க்க முயல்கின்றோமா? இல்லையே.

வீதிகள் நிர்மாணம் பெருமளவுக்கு நடைபெறுகின்றன. அதன்மூலம் போக்குவரத்து வசதியும் பொருளாதார மேம்பாடும் தொடர்கின்றது. இன்னும் என்னவெல்லாமோ பற்பல பயன்கள் கிட்டியது. நாட்டு முன்னேற்றத்திற்கு பலவிதத்திலும் பயன்படும் சாலைகள் அவை என்ற கோசங்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றே எனலாம்.

போக்குவரத்தும் எளிமையாகி உள்ளது. இதெல்லாம் ஒத்துக் கொள்ளக் கூடியதே. ஒரு வளரும் நாடு என்றால் இவையனைத்தும் தேவை. உள்கட்டமைப்பு வசதிகள் நமக்கும் தேவை, நம் நாட்டில் முதலீடு செய்யத் துடிக்கும் வெளிநாடுகளுக்கும் தேவை.

ஆனால், சாலையின் இருமருங்கிலும் நம் மூதாதையர்கள் நட்டு வைத்து கண்ணீரும், செந்நீரும், ஏன்? சிறுநீரும் பெய்து வளர்த்த புளிய மரங்கள் எங்கே? யாருடைய பேராசைக்கு அவை பலியாயின. இருபுறச் சாலைகளிலும் பல்லாயிரக்கணக்கான விளைநிலங்கள், பலருடைய வீடுகள், வழிபாட்டிடங்கள் எல்லாம் மறைந்தன.

ஆனால் மரங்கள்? எத்தனை இலட்சம் என்றே யாருக்கும் தெரியாது. அசோகர் மரங்களை நட்டார் என்று நாம் நம்முடைய வரலாற்றுப் பாடங்களில் சொல்லிக் கொடுத்து விட்டு அம்மாணவர்களின் கண்ணெதிரிலே இத்தனை இலட்சம் மரங்களை பலி



கொடுத்து விட்டு, சுற்றுச்சூழல் தினம் கொண்டாடுவதால் என்ன பயன்?

எனக்குத் தெரிந்த ஒருவர் இத்தகைய மரம் நடு விழாக்களில் மிக்க ஆர்வம் கொண்டவர் போலக் காட்டிக் கொள்வார். ஆனால் தன் வீட்டில் நிழல் மறைத்து துணிகளைக் காய வைக்க முடியவில்லை என்று கூறி ஓங்கி வளர்ந்திருந்த ஒரு பெரும் வேப்பமரத்தை வெட்டிச் சாய்க்க வைத்தார். இதுதான் மரம் நடு விழாக்களில் பங்கெடுப்போர் இலட்சணம் என்று மனத்திற்குள் நினைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இதுபற்றிப் பேசப்போனதன் பலன் அவர் என்னிடம் பேச்சை நிறுத்தி விட்டார்.

மரங்கள் நிழல் தரும், கனி, காய் தரும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும், மழை வளம் பெருக்கும் என்பன மட்டுமல்ல, பல்லுயிர்ப் பெருக்கத்திற்குக் காரணமான பறவைகள் வாழ கூடும் வீடும் தரும். இவை மட்டுமல்லாது மனிதர்களுக்கு உணவளிக்கும் பெரும் பணியையும் அவை செய்கின்றன.

சரி பல்லாண்டுகாலம் உயிர் வாழ்ந்த வானோங்கி வளர்ந்த நிழல் தரும் மரங்கள் வெட்டப்பட்டு விட்டன. ஆனால் புதிய பயன் தரும் மரங்கள் நடப்பட வேண்டாமோ? அதுதான் இல்லை. சாலையோரங்களில் நிழல் என்பதே இனிக் கிடைக்காமல் போகலாம். மேலும் பிளாஸ்டிக்கால் ஆன ஒரு கூரை ஒன்றை நட்டுவிட்டால் போதும். அதை நிழல் குடை என்றும் சொல்லிக் கொள்வர். பிறகு எப்படி வெயில் குறையும் மழை நிறையும் என்பதெல்லாம் பெரும் கேள்விக்குறிகளே...!

ஒரு மரம் சுமார் 50 ஆண்டுகள் வெட்டப்படாமல் இருந்தால், அதனால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன? ஒரு மரம் நாட்டுக்குச் செய்யும் சேவை மதிப்பு சுமார் 30 இலட்சமாகும். பத்து



ஏர்கண்டிசனர்கள் 24 மணிநேரம் ஓடுவதால் ஏற்படும் குளிர்ச்சியை ஒருமரம் தனி நிழல் மூலம் தருகின்றது. சுமார் 20 பேருக்குத் தேவையான பிராண வாயுவை ஒரு ஏக்கரில் வளரும் மரங்கள் தருகின்றன. இதுபற்றியெல்லாம் கவலைப்படாத மக்களால் மரங்கள் வெட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

புதிதாக நடப்படும் மரங்களோ வெறும் யூகலிப்டஸ் மரங்கள்தான். அவையும் அடிக்கடி காகித தொழிற்சாலைகளுக்காகவும் வேறு பல தேவைகளுக்கும் வெட்டப்படுகின்றன. இம்மரங்களால் நிலத்தடி நீர் மிகுதியாக உறிஞ்சப்பட்டு நிலமகள் நீரிழக்கின்றாள்.

எனவே தற்போதைய வீண் கொண்டாட்டங்களையெல்லாம் புறம் தள்ளிவிட்டு பின்வரும் தலைமுறையை வாழவைக்கும் வகையில் மரங்களை நட்டு வளர்ப்போம். நம்மையும், நம் பின் தலைமுறைகளையும் காத்திடுவோம் என்று அனைவரும் உறுதி மேற்கொள்வதே நாம் அனைவரும் செய்ய வேண்டிய ஒரே செயல்.

# கச்சதீவு சென்றோர் குறித்து கியூ பிரிவு இரகசிய விசாரணை

(இராமநாதபுரம்)

கச்சத்தீவு விழாவுக்கு சென்று வந்தவர்களுடன், கடத்தல் குறித்து சிலர் திட்டம் வகுத்துள்ளதாக கிடைத்த தகவலின் படி, கியூ பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கச்சத்தீவு அந்தோனியார் திருவிழாவுக்காக மட்டுமின்றி, வேறு நோக்கத்திற்காகவும் சிலர் செல்வது குறித்து கிடைதத தகவலின்படி, கியூ பிரிவு பொலிஸார், அங்கு சென்று திரும்பியோர் குறித்து விசாரித்து வருகின்றனர்.

கச்சத்தீவு செல்ல விண்ணப்பித்தோரில், 18 வெளியிடங்களில் உள்ள அகதிகள் திருட்டுத்தனமாக செல்வதற்காக வந்தது கணடு பிடித்து, அவர்கள் திருப்பி அனுப்பப் பட்டிருந்தனர்.

மேலும், கடத்தலில் ஈடுபடும் சிலர், கச்சத்தீவில் இலங்கை முகவர்களைச் சந்தித்து கடத்தலுக்கான திட்டம் வகுத்திருப்பதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்து, பழைய குற்றவாளிகள் யாராவது அங்கு சென்றார்களா



என பொலிஸ் விசாரித்து வருகின்றது.

மேலும், கச்சத்தீவில் 10 ஆயிரம் முதல், 20 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்து தமிழகம் வர, இலங்கையர் பலர் முயற்சித்ததாகவும் தகவல்கள் தொவிக்கின்றன.

# கேரள மீனவர் கொலை விவகாரம்; மன்மோகனுடன் இத்தாலி பிரதமர் பேச்சு

(ரோம்)

இத்தாலி பிரதமர் மரியோ மோண்டி நேற்றுமுன்தினம் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார். அதில் அவர், இத்தாலி கடற்படை வீரர்கள் மீது இந்தியாவில் விசாரணை நடத்துவது சர்வதேச அமைதிக்கும் கடற்கொள்ளைக்கு எதிரான திட்டங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தி விடும் என்று வலியுறுத்தியுள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

கேரள மாநிலம் கொல்லம் கடல் பகுதியில் கடந்த மாதம் 15ஆம் திகதி மீன் பிடித்துக் கொண்டிருந்த குமரி மீனவர்கள் 2 பேரை இத்தாலி சரக்கு கப்பலில் இருந்த பாதுகாப்பு வீரர்கள் சுட்டுக் கொன்றனர்.

மீனவர்களை கடற்கொள்ளையர்கள் என நினைத்து சுட்டுக் கொன்றதாக கூறப்பட்டது. இது தொடர்பாக இத்தாலி கடற்படை வீரர்கள் 2 பேரை கேரள பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தியாவின் நடவடிக்கைக்கு இத்தாலி எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இது தொடர்பாக இந்திய தூதரை அழைத்து இத்தாலி வெளியுறவு அமைச்சர் குய்லியோ டெர்சி கண்டனம் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவு

(புதுடில்லி)

ஆபிரிக்காவில் உள்ள ஏழை நாடுகளை விட இந்திய அரசியலில் பெண்களின் பங்கேற்பு மிகக்குறைவு என, ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலகில் ஜனநாயகத்தை மேம்படுத்தும் இயக்கமான, "இன்டர் பார்லிமெண்ட் யூனியன்" ஒரு ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. 543 இடங்கள் கொண்ட லோக்சபாவில் 60 பேர் மட்டுமே பெண்கள்.

இதேபோல 240 உறுப்பினர்கள் கொண்ட ராஜ்யசபாவில் 24 பேர் மட்டுமே பெண்கள். அரசியலில் பெண்களின் பங்கேற்பு குறித்த பட்டியலில், இந்தியா 105 ஆவது இடத்தில் உள்ளது. அண்டை நாடான வங்கதேசம் இந்த பட்டியலில் 65 ஆவது இடத்தை வகிக்கிறது.


ஆபிரிக்காவின் ஏழை நாடான ருவாணடாவில் நாடாளுமன்றில் 56 சதவீத பெண்கள் கீழ் சபையிலும், 38 சதவீத பெண்கள் மேல் சபையிலும் இடம் பெற்றுள்ளனர். தான்சானியாவில் 36 சதவீத பெண்கள் நாடாளுமன்றில் இடம் பெற்றுள்ளனர்.

உகண்டாவில் 35 சதவீதத்திற்கு அதிகமான பெண் உறுப்பினர்கள் நாடாளுமன்றில் உள்ளனர். தெற்கு சூடானில் 26 சதவீத பெண்கள் நாடாளுமன்றில் உள்ளனர். நாடாளுமன்றில் பெண்கள் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான் 53 ஆவது இடத்தையும், நேபாளம் 85 இடத்தையும் வகிக்கின்றன.

வளர்ந்த மற்றும் பணக்கார நாடுகளான அமெரிக்கா 78 ஆவது இடத்தையும், பிரிட்டன் 53 ஆவது இடத்தையும், இத்தாலி 57 ஆவது இடத்தையும், பிரான்ஸ் 69 ஆவது இடத்தையும், ஜேர்மனி 21 ஆவது இடத்தையும் வகிக்கின்றன.

சவுதி அரேபியா, கத்தார், சாலமன் தீவு, பிலைஸ், பாலவ், மைக்ரோனேசியா, நாரு ஆகிய நாட்டு நாடாளுமன்றில் ஒரு பெண் உறுப்பினர்கள் கூட கிடையாது என அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழலைப் பாதிக்காத மின்சாரம் கொடுத்த தமிழன்



(சென்னை)

அமெரிக்காவில் வசிக்கும் கே.ஆர்.ஸ்ரீதர் சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையில் மின்சாரம் தயாரிக்கும் பொறிமுறையை உருவாக்கியுள்ளார். இவர் திருச்சியில் உள்ள பிரதேச பொறியியல் கல்லூரியில் படித்து பின்னர் அமெரிக்கா சென்று அமெரிக்காவில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்தில் அணுப் பொறியியல் படித்து விட்டு, அதே பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டமும் பெற்றார்.

புத்திசாலியாக இருந்த இவரை நாசா அமைப்பு உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொண்டது. அரிசோனா பல்கலைக்கழகத்தில் உள்ள விண்வெளி ஆய்வு நிலையத்தில் இயக்குநராக அவரை நியமித்தது. செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழ முடியுமா? அதற்குத் தேவையான சாத்தியக்கூறுகளைக் கண்டுபிடிப்பது எப்படி? என்பது பற்றி ஆராய்ச்சி செய்வதே இவரின் வேலை. முக்கியமாக செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் சுவாசிக்கத் தேவையான ஒட்சிசன் தயார் செய்ய முடியுமா என்கிற ஆராய்ச்சியை மேற்கொண்டார். இந்த ஆராய்ச்சியில் மிகப் பெரிய வெற்றியும் பெற்றார்.

ஆனால் அமெரிக்க அரசாங்கமோ திடீரென அந்த ஆராய்ச்சியை ஓரங்கட்டி விட்டது. என்றாலும் தான் கஷ்டப்பட்டு கண்டுபிடித்த விஷயத்தை அப்படியே விட்டுவிடவில்லை. அந்த ஆராய்ச்சியை அப்படியே எதிர்த்திசையாக செய்து பார்த்தார். அதாவது, ஏதோ ஒன்றிலிருந்து ஒட்சிசனை உருவாக்கி வெளியே எடுப்பதற்குப் பதிலாக அதை ஒரு இயந்திரத்துக்குள் அனுப்பி, அதனோடு இயற்கையாகக் கிடைக்கும் எரிசக்தியை சேர்த்தால் என்ன நடக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தார். அது வெற்றியளித்தது. அதில் மின்சாரம் தயாராகி வெளியே வந்தது.

இனி அவரவர்கள் அவரவருக்குத் தேவையான மின்சாரத்தை இந்த இயந்திரம் மூலம் தயார் செய்து கொள்ளலாம் என்கிற நிலையை இவர் உருவாக்கி இருக்கிறார். இந்த இயந்திரத்தின் தற்போதைய பெறுமதி அதிகம். சாதாரண மனிதர்களும் இதனை வாங்கி பயன்படுத்துகிற அளவுக்கு அதன் விலை 3,000 டொலருக்குள் வரலாம் என்கிறார் ஸ்ரீதர்.

# ஹரியானாவில் மக்கள் போராட்டம்

(புதுடில்லி)

ஹரியானா மாநிலத்தில் அரச பணிகளில் இட ஒதுக்கீடு உள்ளிட்டவை களை வலியுறுத்தி, ஜாட் இன மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்கள் சாலை மறியல், ரயில் மறியல் உடபட பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், இவர்களின் போராட்டங்களை ஒடுக்கும் நடவடிக்கையின் ஒருபகுதியாக, பொலிஸார்துப் பாக்கிச் சூடு மேற்கொண்டதில், சந்தீப் என்ற 20 வயது இளைஞர் கொல்லப் பட்டார்.

இதனைக் கண்டித்து, மேலும் ஜாட் மக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. சந்தீப்பின் உடலுடன், அவர்கள் தேசிய நெடுஞ்சாலையில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

# தமிழில் கையெழுத்து கட்டாயம்

அரச அலுவலர்கள் 100 சத வ்தம் தமிழில் தான் கையெழுத்திட வேண்டும் என விழுப்புரம் மாவட்ட அதிகாரி சம்பத் தெரிவித்துள்ளார். ஆட்சி மொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்க நிறைவு விழா விழுப்புரம் மாவட்ட அலுவலக வளாக கூடடரங்கில் நடந்தது. தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் சுபத்ராதேவி வரவேற்றுப் பேசினார். இதில் மாவட்ட அதிகாரி சம்பத் தலைமை வகித்து உரையாற்றும்போது அரச அலுவலர்கள், 100 சதவீதம் தமிழில் கையெழுத்திட வேண்டும். இதற்காக, அனைத்துத் துறை உயர் அலுவலர்களும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் அரசின் கோபபுகள் அனைத்தும் தமிழில் இருக்கவேண்டும். ஜப்பானில் அனைத்துக் கண்டு பிடிப்புகளும் அவர்களின் தாய் மொழியில் தான் இடம் பெற்றுள்ளன.

## துவக்காலச் சிந்தனை



### நம்முடையதை பிறருக்கு பகிர்ந்தளிப்போம்...

வறுமையும் பஞ்சமும் செலவோடு மிக நெருங்கிய தொடர்புடையது. வீணாகச் செய்யும் ஒவ்வொரு செலவும் உலகில் கொடுமையான வறுமையையும், பஞ்சத்தையும் உண்டாக்குகிறது. மனிதன் விரயம் செய்யும் ஒவ்வொரு பொருளும் எங்கோ, யாருக்கோ, ஏதோ ஒரு விதத்தில் ஒரு பஞ்சத்தையும் வெற்றிடத்தையும் உண்டாக்குவதை எந்த விஞ்ஞானமும் பொருளாதாரமும் மறுப்பததற்கில்லை. படைத்த இறைவனின் பகுத்தறிவின் மிகச் சிறிய சான்று இதுவாகும்.

ஒரு நேர உணவின்றி வாடும் பச்சிளம் பாலகர்கள் எத்தனை பேர் நம் சமூகத்திலே இருக்கிறார்கள். அவர்கள் எமது கண்களுக்குத் தென்படுவதில்லை. எமது பார்வைக்கு பளபளப்பான செல்வச் செழிப்பில் மிதக்கும் செல்வந்தர்களே. இன்றைய சமுகத்தினர் எல்லோரும் பெரும் பணக்காரர்களின் நட்பும், அவர்களின் வரவும் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களை சந்தோசத்துடன் எதிர்நோக்குகின்றனர்.

நம்மிடையே உலாவரும் ஏழை, எளிய மக்களைக் கண்டு கொள்வதற்கு நேரமற்றவர்களாக, கண்டும் காணாதவர்களாக இருக்கிறோம்... சிந்திப்போம்...

எதையும் வீணாக்க வேண்டாம், விரயம் செய்ய வேண்டாம். பஞ்சத்திற்கு நீங்கள் ஒரு சிறிய காரணமாகவும் இருக்க வேண்டாம். ஆண்டவன் தந்த உறவையும், பாசத்தையும் பரவலாக்குவோம். பொன்னையும், பொருளையும் இல்லாதவரோடு பகிர்வோம். இன்புற்று இனிது வாழ்வோம்.

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# ஒரு மாற்று நடவடிக்கைக்கு...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனெனில் வெகு காலத்துக்கு முன்னரே தனது மகிந்த சிந்தனைகளின் கருத்துக்கள் வழியாக அவர் சிங்கள - தமிழ் பிளவின் இருப்பிலிருந்து விலகியிருக்கவே விரும்பியிருந்தார்.

ஆனால் தாமதமாக இயங்கும் மின் ஆழிகள் முகத்தில் வெடிக்கும் ஒரு கெட்ட பழக்கத்தை கொண்டுள்ளன. அது உடனடியாக நடக்காவிட்டாலும் கூட, ராஜபக்ஷவின் அணுகு முறைகள் தமிழ்த் தீவிரவ்ாதத்துக்கு மீண்டும் உயிரூட்டும் முயற்சிகளுக்கு வழியினை ஏற்படுத்துவதாகவே உள்ளன.

இல்லாவிட்டால் மே 2009, இல் முள்ளியவளையில் அவர்களது தலைவர் கொல்லப்பட்டதன் பின்னர் ஒரு மறைவிடத்தை தேடி ஓடிக்கொண்டிருக்கும் எல்.ரீ.ரீ.ஈயினது வெளிநாட்டு எச்சங்கள், மெதுவாக மீண்டும் ஒரு மறு வரவை மேடையேற்றத் தயாராகின்றன என்பதை விளக்குவது கடினம்.

ஜனாதிபதி ராஜபக்ஷ, விரும்பினால் ஒரு செயல் வீரர் ஆக மாறுவார், அவர் வெறும் வாய்ச்சொல் வீரரல்ல. அதனை அவர் ஈழப் போரின்போது நிரூபித்துக் காட்டியுள்ளார். எனவே இழந்த களங்களை திரும்ப பெறுவதற்கு ஏற்றதான ஒரு மாற்று நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இப்போதுகூட காலம் கடந்துவிடவில்லை.

மற்றும் அதற்கான முதல் படியாக எல்.எல்.ஆர்.சி அறிக்கையின் பரிந்துரைகளை, நடைமுறைப்படுத்துவதாக இருக்க வேண்டும், நல்லிணக்க முயற்சிகளை ஒரு கால அட்டவணைக்கு உட்படுத்திய திட்டமாக செயற்படுத்துவதோடு மற்றும் பாதுகாப்பை மீள நிலை நாட்டி, உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் அவரது ஆட்சியின்மீது நம்பிக்கையை உருவாக்கும் வகையில் ஆட்சியை மேம்படுத்த வேண்டும்.

இதனால் அவமானம் ஏற்படுகிறது, என்று எண்ண வேண்டிய அவசியம் இல்லை, ஏனென்றால் ஜனநாயகவாதிகள் தங்கள் நாட்டின் கௌரவத்தையும் தங்கள் மக்களின் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்காக தங்கள் செயற்பாடுகளை எல்லா நேரங்களிலும் திருத்தம் செய்து வருகிறார்கள்.

# ஆப்கானில் பிரித்தானிய வீரர்கள் பலி; பிரதமர் டேவிட் கமரூன் கண்டனம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் நிகழ்த்திய வெடி குண்டுத் தாக்குதலில் 6 பிரித்தானிய வீரர்கள் உயிரிழந்தனர். இதற்கு பிரித்தானியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஆப்கானின் ஹெல்மந்த் மாகாணத்தில் பிரிட்டிஷ் வீரர்கள் இராணுவ வாகனத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தீவிரவாதிகள் இராணுவ வாகனத்தின் மீது நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 6 வீரர்கள் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலுக்கு பிரித்தானியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் கூறுகையில், இது எங்களுக்கு மோசமான. நாள் எனத் தெரிவித்துள்ளார். அமெரிக்கத் தலைமையிலான நேட்டோ படையினர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக



ஆப்கானிஸ்தானில் தங்கி தீவிரவாதிகளுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றனர். இந்நிலையில் 2014ஆம் ஆண்டுக்குள் அனைத்து வீரர்களும் திரும்ப அழைக்கப்படுவர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# குறிக்கோளுடன் வாழ்பவர்கள் விரைவில் இறக்கும் அபாயம்

(லண்டன்)

குறிக்கோளுடன் வாழ்பவர்கள் அதிகம் சம்பாதித்தாலும் நிம்மதியில்லாமல், இளம் வயதில் மரணமடைய கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

லண்டனைச் சேர்ந்த நோட்ரி டேம்ஸ் பல்கலைக் கழக வல்லுநர்கள், திமோதி ஜட்ஜ் என்பவர் தலைமையில் ஒரு ஆய்வு மேற்கொண்டனர். ஒக்ஸ்போர்ட், ஹார்வர்டு, யேல் போன்ற பல்கலைக் கழகங்களில் படித்த அதி மேதாவிகள், 717 பேரை, இவர்கள் தங்கள் ஆய்வுக்கு எடுத்து கொண்டனர்.

சிறு வயது முதலே அதிக குறிக்கோளுடன் படித்து, உயர் பதவிகளை வகித்த பலர் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்தால், உறவுகளை அதிகம் வளர்ப்பதில்லை. இன்னும் சிலர் முன்னேற வேண்டும் என்றவெறியில், உடல் நலத்தை கூட கவனிப்பதில்லை. வாழ்வில் உயர வேண்டும் என்ற ஆர்வத்தை, இவர்கள் தங்கள் உடல் நலத்திலும், சமூக உறவிலும் காண்பிக்காததால், அதிக குறிக்கோள் இல்லாமல் வாழ்பவர்களை விட, இவர்கள் குறைந்த சந்தோஷத்தையே அனுபவிக்கின்றனர். ஓரளவு சந்தோஷத்தை அனுபவிப்பவர்களும், அற்ப ஆயுளில் போய் சேர்ந்து விடுகின்றனர் என இந்த ஆய்வை மேற்கொண்ட திமோதி ஜட்ஜ் தெரிவித்துள்ளார்.

# ஓசாமாவை காட்டிக் கொடுத்தது அவரது மனைவிகளில் ஒருவர்

## பாகிஸ்தான் இராணுவம்




(இஸ்லாமாபாத்)

ஓசாமா பின்லேடனின் இருப்பிடத்தை அமெரிக்க உளவாளிகளுக்கு ஓசாமாவின் மனைவி தான் காட்டிக் கொடுத்தார் என்ற புதிய தகவல் தற்பொழுது வெளியாகி உள்ளது.

பாகிஸ்தானின் ஓய்வு பெற்ற இராணுவ படைத் தலைவர் ஷௌகாத் காதிர் ஓசாமாவின் கடைசிக் கால வாழ்க்கை குறித்து தெரிவித்திருப்பதாவது, ஓசாமாவுக்கு 3 மனைவிகள் இருந்தனர். பாகிஸ்தானில் அபோதாபாத் என்ற இடத்தில் ஓசாமா வசித்த வீட்டில்தான் இவர்கள் மூவரும் இருந்துள்ளனர். இவரது மூத்த மனைவி ஓசாமா தங்கியிருந்த வீட்டின் கீழ்தளத்தில் வசித்து வந்தார். மூன்றாவது மனைவியான அமல் சதா மீது ஓசாமாவுக்கு அதிக பிரியம் இருந்ததால், மூன்று மனைவியருக்கும் இடையே கருத்து வேறுபாடும் மோதலும் இருந்து வந்துள்ளது. அமெரிக்க உளவாளிகளுக்கு ஓசாமாவை அவனது மூத்த மனைவி தான் காட்டிக் கொடுத்ததாக அமல் சதா பாகிஸ்தானில் நடந்த விசாரணையின் போது தெரிவித்துள்ளார். மேலும் தனது கணவர் ஓசாமா 2002 ஆம் ஆண்டில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார் என கூறினார்.

# சிரியாவில் வெளிநாட்டு இராணுவ தலையீடு வேண்டாம்



சிரியாவில் எந்தவொரு வெளிநாட்டு இராணுவத் தலையீடும் நிலைமைம்யை மேலும் மோசமாக்கும் என்று சிரியாவுக்கான ஐ.நா மற்றும் அரபு லீக்கின் சிறப்புத் தூதுவரான கோபி அனான் எச்சரித்துள்ளார்.

டமாஸ்க ருக்கான தனது விஜயத்தின் திட்டம் குறித்து கோபி அனான் கூறுகையில், சிரியாவின் தற்போதைய நிலைமையை அரசியல் ரீதியாக மட்டுமே தீர்த்து வைக்கப்பட முடியும் என்று கூறியுள்ளார்..

மேலும் சிரிய மக்களின் ஆசைகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில், தீர்வு காண சிரியாவின் அரசாங்கத்தையும், எதிர்க்கட்சியையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்நிலையில் சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிராக நடந்து வரும் போராட்டத்தில் 8500 பேர் பலியாகி இருப்பதாக பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. இறந்தவர்களில் 6,195 பேர் பொதுமக்கள் என்றும், 1,835 பேர் இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் என்றும், 428 பேர் புரட்சிப் படையைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.


# திருமணமாகி ஒரு மணிநேரத்தில் விவாகரத்துச் செய்த கணவர்



புதிதாக திருமணம் செய்த மனைவி கார் கேட்ட காரணத்தினால், திருமணமான 1 மணி நேரத்திலேயே கணவர் விவாகரத்து செய்த சம்பவம் மலேசியாவில் நடந்துள்ளது. லீ (வயது-23) வுக்கு 27 வயதான வாங் என பவருடன் திருமணம் பதிவாளர் அலுவலகத்தில் நடந்தது. அப்போது அங்கு கார் நிறுவனத்தின் உரிமையாளர் ஒருவர் வந்தார். லீ தனது கணவர் வாங்கிடம் புதிய கார் ஒன்றை வாங்கித் தருமாறு கேட்டார். அதற்கு வாங் மறுப்பு தெரிவிக்கவே, இவர்களின் சண்டை முற்றியது. கார் வாங்கித் தராவிட்டால், விவாகரத்து செய்து விடுவதாக லீ மிரட்டினாள். பின் அவர்கள் விவாகரத்து பிரிவுக்கு சென்று அதற்கான மனுவை பூர்த்தி செய்து கொடுத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மெய்தான் பாருங்கோ...

## பணமும்; பாமரமும்



இப்ப கிட்டடியில ஒரு அரசல் புரசலான செய்தி அடிபட்டது கேள்விப்பட்டனிங்களே!

உந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட நேரம் தொடக்கம் எனக்குள்ள பெரியதொரு அந்தரமும் ஆவேச மனப்பான்மையுமாக்கிடக்குது பாருங்கோ... நானும் வன்னிப்பக்கம் வாழ்ந்தவன்; அதுவும் புலியளோடை மட்டுமில்லை; போருக்குள்ளையும் முகம் குடுத்தவன் எண்ட ரீதியில இப்ப இதிலவந்து என்ர வாயைத் திறக்கவேண்டிய சூழ்நிலையாப்போச்சுது.

வன்னியில மீள்குடியேறின சனங்கள் தங்கட தேவையளைப் பூர்த்தி செய்யுறதுககாக அரச அதிகாரிகளின் இலஞ்ச மோகத்தில் சிக்கியுள்ளதாக ஊடகங்களும் சரி, ஊர்ச்சனமும் சரி நல்லாப் பறையத்தான் செய்யினம் பாருங்கோ...

இப்ப வன்னிச்சனத்தின்ர வாழ்க்கைத்தரம் எப்படிப்பட்ட நிலையில இருக்குதெண்ட சங்கதி வன்னிக்கு வெளியில உள்ள பெரும்பாலான ஆட்களுக்கு இன்னமும் சரியாத் தெளிவாக விளங்காமல் இருக்கிறதானது ஒரு வெக்கங்கெட்ட வேதனைப் படவேண்டிய விசயம் எண்டதையும் நான் இதில சொல்லவாறன்.

ஏதோ அங்கினேக்கை முதல்கட்டமாகக் குடியேறினதுகளின்ர பாடு பரவாயில்லை எண்டு சொன்னாலும், அவையளின்ர அடிப்படைத் தேவையள் இன்னமும் பூரணமாகச் செயற்படுத்திக் கொடுக்கேல்லை எண்டதை கனபேர் இன்னமும் நல்லாச் சிந்திக்கேல்லை.

அதிலையும் உந்த நீட்டுக்காச்சட்டை போட்ட சில அரசாங்க உத்தியோத்தர்மாருடைய செய்கை காரியங்கள் "மக்கள் சேவையே மகேசன்சேவை" யெண்டு சனத்துக்கு மனப்பூர்வமாக தங்கட கடமையளைச் செய்யிற சில அரச உத்தியோகத்தரை அவமானத்துக்குள்ள கொண்டு போய் தள்ளிவிடுகுது பாருங்கோ!

சனத்துக்கு சேவை செய்யுறதுக்கு அரசாங்கம் மாதாமாதம் ஒழுங்காச் சம்பளம் குடுக்கிற நேரத்தில, தங்கட பொழுதுபோக்குச் சிலவுகளான பீடி, சிகரெட் குடிக்கிறதுக்கும், வெத்திலைபாக்கு போடுறதுக்கும், கூட்டாளிமாரோடை சேந்து சாப்பாட்டுக்கடையளுக்குப்போய் தேத்தண்ணி, ரீ குடிக்கிற செலவைச் சமாளிக்கிறதுக்கும் மேலதிகமாகக் காசு தேவைப்படுகுது சில அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கு.

இதைவிட இன்னும் சிலபேர் இருக்கினம் பாருங்கோ. சரியான பிசினித்தனங்கள். சனத்துக்கு இலகுவாய் செய்து குடுக்கக் கூடிய ஒரு அரச கடமையை காசு பணத்துக்காக இழுத்தடிச்சுக்கொண்டு போய் கடைசியில கையில காசு வராட்டி அந்த அலுவலை அம்போ... எண்டு கையை விட்டிட்டுப்போயிடுவினம். அது அப்பிடியே கிடப்பில கிடந்து தூசு பிடிச்சுப் போயிடும்.

மக்களின் அடிப்படைத்தேவைகளை எந்தப் பிரதியுபகாரத்தையும் எதிர்பாக்காமல் அந்த மக்களுக்குத் தன்ர கடமையைச் செய்து குடுக்கிறவன்தான் உண்மையான அரச உத்தியோகத்தன்.

அதைவிட்டிட்டு அரசாங்கம் கொடுக்கிற சம்பளத்தோடை இன்னும் காசு தேவையெண்டு சனத்திட்டை மறைமுகமாக் கையை நீட்டுறவை றோட்டு வழிய திரியுற பிச்சைக்காரரைவிடக் கேவலங்கெட்டவை தெரியுமே!

ஏனெண்டால் சனங்கள் செலுத்துற வரிப்பணம்தான் உந்த அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கு மாதாமாதம் சம்பளப்பணமாப்போகுது. பிறகு அதுகாணாதெண்டு அதேசனத்திட்டை 'பின் பக்கத்தால்' கையை நீட்டிக் காசு வாங்கிறது 'பிச்சைக்கு' சமமானது எண்டதை நான் இதில தெளிவாச் சொல்லவாறன்.

அதோட பாருங்கோ எங்கட வன்னிச் சனத்தை மட்டுமல்ல வேற எங்கையெண்டாலும் உந்த அரசாங்க உத்தியோகத்தர்மார் நல்லாப்புரிஞ்சு நடக்கவேணும் கண்டியளே!

ஏனெண்டால் சண்டைக்கு முன்னம் வன்னியில வாழ்ந்த வாழ்க்கை ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை மாதிரித்தான். உப்புப் புளியிலயிருந்து சாயத்தண்ணியோட நக்கிக்குடிக்கிற சீனிவரையிலும் ஒவ்வொண்டா சிக்கனமா மிச்சம் பிடிச்சுச் சேத்ததெல்லாம் போருக்குள்ள துலைச்சுப்போட்டு, வெறுங்கையோட திரும்பி வந்து வெளிக்கிற திசை தெரியாமல் விழிபிதுங்கி நிற்குதுகள் சனங்கள் இப்பிடி நிர்க்கதியாக நிக்கிற சனத்திட்டை போய் ரேசன் சாமானுக்கும், மண்ணெண்ணைக்காட்டுக்கும், காணிப் பெமிட்டுக்கும் காசாக அல்லாட்டி கத்தரிக்காய், புடலங்காயா எதிர்பாக்கிற ஒரு அரச உத்தியோகத்தனை எந்த வகைக்குள்ள அடக்கலாம்?

'தமிழன்'... எண்டதுக்குள்ள அடக்கலாமா...? அல்லாட்டி ஊரவன்... எண்டதுக்குள்ள அடக்கலாமா...? உறவு முறையானவன் எண்டதுக்குள்ள சேர்க்கலாமா...,?

போரினால் கெட்டுநொந்து போயிருக்கிற சனத்தின்ர வாழ்வாதாரத்தில மேலும் மேலும் 'கையூட்டு' வாங்குறதன் மூலம் அவையளின்ர வாழ்க்கையைச் சிதைக்கின்ற இந்த மனிசரெல்லாம் நன்றாகப் படிச்சவர்களா...? அன்பு, நன்றி, கருணை எண்ட உள்ளத்தோடு வளர்க்கப்பட்டவர்கள் தானா? சொந்தச்சகோதரர் துன்பத்தில் சாதல்கண்டும் சிந்தனை கொள்ளாத இவர்கள் பணம் என்பதிலே குறியாக இருந்து கொண்டு எப்படி மிடுக்காக... நளினமான ஆங்கில உச்சரிப்புகளோடு மக்கள் மத்தியில ஒரு 'கௌரவமான' மனிதர்களாக உலாவரமுடிகிறது...? சிந்திக்க வேண்டியவை ஒருக்காச் சிந்திச்சால் நல்லது கண்டியளே!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# இயல்பு நிலையைக் குழப்ப முனையும் தமிழ் பிற்போக்குக் கூட்டமைப்பு

ஆரம்பத்தில் பிரித்தானிய காலனித்துவம் விட்டுச்சென்ற வெஸ்ற்மினிஸ்ரர் முதலாளித்துவ ஜனநாயக பாரம்பரியத்தைப் பின்பற்றி இரு கட்சி ஜனநாயக முறையில் தமிழ் காங்கிரசும் தமிழரசுக் கட்சியும் எதிர் எதிர் அணிகளாகச் செயற்பட்ட போதும், 1970களில், அந்த இரு கட்சிகளும் 'தமிழர்களின் நலன்களைக் காக்க' என்ற போர்வையில் தமது நீண்டகாலப் பகைமையை மறந்து ஒரே அணியாகச் சேர்ந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டன.

அந்தத் தமிழர் விடுதலைக் கூட்டணியே தனித் தமிழ் நாடு என்னும் கோரிக்கையை முன்வைத்தது. அதே நேரத்தில் இனரீதியாக முரண்பாடு இருந்தபோதிலும் தமது பழைய தென்னிலங்கை வர்க்க சகாவும், ஏகாதிபத்தியத்தின் மிக நம்பிக்கையான விசுவாசியுமான ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கூடிக்குலாவி வந்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டரசாங்கங்கள் பதவிக்கு வரும் நேரங்களில் தமிழ் பிற்போக்குத் தலைமை அரச எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவதிலிருந்தும், ஐ.தே.க ஆட்சிபீடம் ஏறும் நேரங்களில் அவர்களுடன் கூடிக்குலாவுவதிலிருந்தும் இந்த உண்மையை இலங்கை வரலாற்றில் அடிக்கடி காணலாம்.

70களில் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்தது போல, 80களில் அவர்கள் இரு பகுதியினரும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி மீதும் மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். ஆனாலும் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கிய தமிழீழ தீர்மானமும், அது தொடக்கி வைத்த வன்முறை நடவடிக்கைகளும், அதற்காக அவர்கள் திரட்டி வைத்திருந்த இளைஞர் குழாமும் அப்படியே இருந்தன.

எனவே பழைய தமிழர் கூட்டணித் தலைமையை நிராகரித்த தமிழ் இளைஞர்கள் தமிழீழக் கோரிக்கையையும், வன்முறை அரசியலையும் தமது கைகளில் எடுத்துக்கொண்டு பல்வேறு இயக்கங்களை உருவாக்கி ஆயுதம் தாங்கிப் போராடத் தொடங்கினர்.

பொதுவாக உலகில் எல்லாவிதமான



விடுதலைப் போராட்டங்களும், ஏகாதிபத்திய எதிர்ப்பையும் முற்போக்கு அரசியலையும் அடிப்படையாகக் கொண்டு வழிநடத்தப்பட்டவையே என்ற அடிப்படையில், இலங்கைத் தமிழ் இளைஞர்களின் பெரும்பாலான ஆயுதப்போராட்ட இயக்கங்களும் கூட அந்த வழிமுறையையே பின்பற்ற முயற்சித்தன. அதற்கொரு பிரதானகாரணம், அன்றைய காலகட்டத்தில் இலங்கையில் ஏகாதிபத்திய சார்பான, படுபிற்போக்கான ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஐ.தே.க ஆட்சியில் இருந்தமையும், அது தேசிய இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்க்காமல், அதை இராணுவ ரீதியாகத் தீர்க்க முயன்றதுமாகும்.

இத்தகைய ஒரு சூழலில், இலங்கைத் தமிழர்களின் தேசிய தற்பாதுகாப்புக்கான போராட்டம் முற்போக்கு புரட்சிகர சக்திகளின் சுயாதீனமான தலைமையை உருவாக்கும் சூழலும் உருவாகி வந்தது.

மறுபக்கத்தில் இந்தியாவின் நெருங்கிய நட்பு சக்தியான சோவியத் வல்லரசுடன் உலகளாவிய ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டிருந்த மேற்கத்தைய ஏகாதிபத்தியம் தனக்கு விசுவாசமான அணியை தமிழ் இயக்கங்கள் மத்தியில் உருவாக்க எத்தனித்தது. இதன் விளைவாகவே இந்திய சார்பு இயக்கங்களும் அதற்கெதிராக மேற்கத்தைய சார்பு புலிகளும் தோற்றம் பெற்றார்கள். இதன் அடிப்படையிலேயே சில அமைப்புகளுக்கு இந்தியாவின் நட்பைப் பெற்றிருந்த பாலஸ்தீன விடுதலை இயக்கம் இராணுவப் பயிற்சி அளிக்க, ஏகாதிபத்திய விசுவாசநாடான இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்பு புலிகளுக்கு இராணுவப் பயிற்சி அளித்தது.

ஆனால் இறுதியில் இந்தப் போட்டா போட்டியில் புலிகள் இயக்கமே வெற்றி பெற்றது. அது சுலபமாக இந்திய சார்பு இயக்கங்களையும், சுயாதீனமான முற்போக்கு புரட்சிகர இயக்கங்களையும் அழித்தொழித்தது.

அதன் இந்த நடவடிக்கைகளுக்கு மேற்கிலிருந்து சென்ற பெருந்தொகை பணமும் ஆயுதங்களும் அரசியல் ஆதரவும் பக்க பலமாக அமைந்தன. அது மாத்திரமின்றி பாரம்பரிய பிற்போக்குத் தமிழ் தலைமையும் புலிகளையே ஆதரித்தது. ஐ.தே.கவின் மறைமுக ஆதரவும் (பிரேமதாச அரசு வெளிப்படையாகக்கூட) புலிகளுக்கே இருந்தது. புலிகள் இந்த ஆதரவுகளைப் பயன்படுத்தி மாற்று இயக்கங்களை மட்டுமின்றி, ஜனநாயக அரசியல் கட்சிகள், இடதுசாரிக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மனித உரிமை அமைப்புகள், புத்திஜீவிகள் என எல்லாவிதமான தமிழ் ஜனநாயக சக்திகளையும் அழித்தொழித்தனர்.

உள்நாட்டில் மட்டுமின்றி இந்தியா உட்பட இந்தப் பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளுக்கும் அபாயகரமான சக்திகளாகவும், தமிழ் மக்களின ஜனநாயக வாழ்வுக்கும் சவால் விடுகும் பாரிய சக்தியாக உருவெடுத்தனர்.

மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகள் தமது நாடுகளில் புலிகளின் இயக்கம் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுக்குமுகமாக அதைத் தடை செய்தனவே தவிர, அது இலங்கையில் மேற்கொண்ட பயங்கரவாத மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளைத் தடுக்க பெரிய முயற்சிகள் எதனையும் எடுக்கவில்லை.

இன்று மேற்குலக சக்திகள் இலங்கை மீது பலவிதமான குற்றச்சாட்டுகளை முன்வைத்து, தற்போதைய அரசை வீழ்த்த முயற்சிப்பதோடு, ஆசியப் பிராந்தியத்தில் தங்கள் பிடியை வலுப்படுத்திக் கொள்ள முயல்கின்றன.

மறுபக்கத்தில், புலிகள் இயக்கம் இலங்கையில் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டிருப்பினும், அதைப் பெற்றெடுத்த தமிழ் பிற்போக்கு சக்திகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இன்னமும் வலுவாகச் செயற்படுவதுடன், இன்னொரு புலி இயக்கத்தை உருவாக்கப் போவதாகவும் மிரட்டி சூழலைக் குழப்ப முனைந்து வருகின்றனர்.

எனவே தமிழ் பிற்போக்கு சக்திகள் முழுமுழுதாக அழிக்கப்பட்டு, தமிழ் மண்ணிலும் இலங்கையிலும் ஒரு நிலையான மக்கள் ஜனநாயக அரசியல் அதிகாரம் நிலைநாட்டப்படும் வரை, தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கும், சகல விதமான ஏகாதிபத்திய அடிவருடிகளுக்கும் எதிரான பிரச்சார வழியிலான அரசியல் போர் தவிர்க்க முடியாதது. எப்படி சர்வாதிகாரி ஹிட்லர் அழிக்கப்பட்டும்கூட, மேற்குலகில் இன்னமும் நாஜியக் கருத்துக்களும் பாசிச சிந்தனைகளும், அதற்கெதிரான பிரச்சாரங்களும் நிலவுகின்றதோ, அது போன்றதே புலியிசமும் அதற்கெதிரான போரும்.

**– வானவில் 14 மாசி இதழிலிருந்து**

# ஒரு மாற்று நடவடிக்கைக்கு இன்னமும் தாமதமாகிடவில்லை

**- கேணல். ஆர். ஹரிஹரன் கட்டுரையிலிருந்து**

ஐநா மனித உரிமைகள் சபை, வசீகர வார்த்தைகளை பயன்படுத்தி மனித உரிமைகளை பாதுகாப்பதாக சொல்லிக் கொண்டாலும் இந்த விடயத்தில் சர்வதேசத்தின் பரிமாணம் முற்றாக அந்த வழியில் இல்லை. குற்றம் கண்டு பிடிக்கும் நோக்கில் பார்த்தோமானால், ஐநா பொது மன்றம், இராஜதந்திர விடயங்கள், யதார்த்த அரசியல் போக்கு, அரசியல் குதிரை வியாபாரம், உள்ளக சக்திகள் மற்றும் பிராந்தியங்களுக்கு இடையேயான அரசியல் என்பனவற்றின் நிபந்தனைகளுக்கு உட்பட்டே இயங்குகிறது.

பனிப்போர் காலத்தில் நாடுகள் மற்ற நாடுகள் மீது பழி போட்டு தப்பித்துக் கொள்ள வாய்ப்பு இருந்தது. ஆனால் இப்போது அது அவ்வளவு சுலபமல்ல. பல்வேறு முறைகளில், நாடுகள் தங்களுள் வலையமைப்புகளைக் கொண்டிருக்கின்றன. அமெரிக்கா அதன் எதிர்ப்பாளர்கள் செய்வதைக்கூட கண்டுபிடிப்பதைப் போல. இதற்கான சமீபத்தைய உதாரணம் உலகின் முதலாம் இடத்திலிருக்கும் கட்டுப்படுத்த முடியாத ஆபத்தான நாடான வட கொரியா கூட அமெரிக்காவுடன் ஒரு விட்டுக் கொடுப்புக்கு வந்ததுதான்.

ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் அவரது அரசாங்கம் என்பன சர்வதேச சமூகத்துக்கு (ஆங்கிலம் பேசும் உலகத்தில் இதன் கருத்து அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் என்பதாகும்) தனிப்பட்ட ரீதியிலும் மற்றும் பகிரங்கமாகவும் வழங்கிய பல்வேறு வாக்குறுதிகளை திரும்ப நினைவூட்டும் பணியை இலங்கையிடம் செய்வதற்கு வாய்ப்பான ஒரு புள்ளியை நோக்கி முன்னேறுவதற்கான வழியை சர்வதேச சமூகத்துக்கு யுத்தக் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பன வழங்குகின்றன.

யு.என்.எச்.ஆர்.சி முன்னாலுள்ள விடயம் நிச்சயம் இதையே பிரதிபலிக்கிறது. இந்த விடயம் ஐநா மன்றத்தின் முன்னால் ஏற்கனவே இரண்டுமுறை வந்து இப்போது மூன்றாவது முறையாக வந்து வெடிக்கும் நிலை ஏற்பட்டதன் பின்பே, இலங்கையும் இதை உணர்ந்து கொண்டது போலத் தெரிகிறது.

மிகவும் தாமதமானாலும்கூட சனல் - 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான காணொளிகளில் உள்ள போர்க் குற்றம் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்காக ஒரு விசாரணை மன்றத்தை அமைக்க அதன் இராணுவம் கட்டளை பிறப்பித்திருக்கிறது. ஆச்சரியப்படும்படி, சாதகமான இந்த செயற்பாடு, இலங்கையால் பலமுறை திரும்பத் திரும்ப கூறப்பட்ட அதன் சட்டபூர்வ வாதத்தின் பொதுத் தன்மையை மழுங்கடித்திருக்கிறது.



உணர்ச்சிவசப்படாமல் நோக்கினால், அமெரிக்காவின் இந்த நகர்வு, ராஜபக்ஷ அரசாங்கம் போருக்கு முன்பும், போரின் போதும் மற்றும் போருக்குப் பிறகும் மௌனமாகக் முயற்சித்த குடியியல் சமூகங்களின் குரல்களை வலுவாக்கியுள்ளன. யுத்தத்தின் பின் விளைவுகளினால் குரலெழுப்ப முடியாமல் அரசியல் காட்டுக்குள் தனித்து விடப்பட்டுள்ள பாதிப்புக்குள்ளான தமிழ் மற்றும் சிங்கள சமூகத்தை சேர்ந்த மக்களை, சர்வதேசத்தின் கவனத்தின்கீழ் கொண்டு வந்துள்ளது.

அமெரிக்காவும் மற்றும் மேற்கு நாடுகளும் ஏன் இலங்கை மீது குற்றம் சுமத்துவதில் விடாப்பிடியாக நிற்கின்றன? இதற்கான பதில் மிகவும் சுலபமானது, இலங்கைத் தலைவர்கள் அநேகமாக சொல்லி வருவது, இலங்கை, எல்.ரீ.ரீ.ஈயினை வெற்றி கொண்டதில் அவர்களுக்கு பொறாமை, ஏனெனில் அவர்களால் ஜிகாத் பயங்கரவாதத்தை, இதைப் போல திறமையாக கையாள முடியவில்லை என்பதால். அதேபோல தமிழ் புலம் பெயர்ந்தவர்களின் வாக்குகளைக் கவருவதற்காக அவர்கள் அப்படிச் செய்கிறார்கள் என்கிற விளக்கத்தை வழங்குவதும் வெகு சுலபம். இவை முற்றாக உண்மையானவை அல்ல.

மேற்கு நாடுகள், எல்.ரீ.ரீ.ஈ போன்ற பயங்கரவாதங்களின் மேடையேற்றத்தை தடுக்கும் தங்கள் கடப்பாட்டின் ஒரு பகுதியாக, வெளிநாடுகளில் எல்.ரீ.ரீ.ஈ உட்புகுந்திருக்கும் மூலகங்களை தொடர்ந்து கண்டுபிடித்து தண்டனை வழங்கி வருகின்றன. இலங்கையின் கறுப்பு பட்டியலில் அடிக்கடி இடம் பிடித்து வரும் ஐக்கிய இராச்சியம் கூட, எல்.ரீ.ரீ.ஈ புத்துயிர் பெறும் முயற்சிக்கு புது இரத்தம் பாய்வதை தடுக்கும் விதமாக, பெருமளவிலான போலி புகலிடக் கோரிக்கையாளர்களை, இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளது.

ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு ஒரு தற்காலிக நிவாரணத்தை உள்நாட்டிலும் மற்றும் சர்வதேசத்திலும் வழங்குவதற்காக ஜெனிவாவில் நடக்கும் வார்த்தைப்போரை இலங்கை வெற்றிகரமாக முறியடித்துக் கொண்டிருந்தாலும் கூட, ஏற்கனவே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கம் மக்கள்மீது திணித்திருக்கும் பல்வேறு விதமான விலைவாசி உயர்வுகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக ஜனாதிபதி யு.என்.எச்.சி.ஆர்.க் கூட்டத்தை மிதமிஞ்சிய வடிவத்தில் ஊதிப் பெருப்பிக்கிறார் எனக் கூறியுள்ளது.

இன நல்லிணக்க முயற்சி ஒரு அரசியல் செப்படி வித்தைக்கு இலக்காகி உள்ளது, ராஜபக்ஷ மற்றொரு ஆணைக்குழுவின் சிபார்சை அதை முன்னேற்ற முயற்சி மேற்கொள்கிறார் - இந்த முறை நாடாளுமன்ற தெரிவுக் குழு என்பதை தெரிவு செய்துள்ளார். அவரது தந்திரங்கள் யாவும் ஓரளவு கடினமான நல்லிணக்கத் தீர்வுகளை மேற்கொள்வதை விடுத்து, நேரத்தை கடத்துவதாகவே உள்ளன. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை,

(12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். கோட்டை அழகுபடுத்தல்; முதற்கட்டப் பணிகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை அபிவிருத்திக்காக நடைபெற்ற கலந்துரையாடலின் போது மாநகர சபையும், நகர அபிவிருத்தி அதிகார சபையும் கலந்துரையாடி செயற்திட்டங்கள் பற்றிய முடிவுகள் எட்டப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

யாழ். கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளை அழகுபடுத்தலின்போது முதற்கட்டமாக அப்பகுதியிலுள்ள பற்றைகளை அகற்றி இடிபாடுகளை மட்டப்படுத்தி, பள்ளங்களுக்கு மண் போட்டு நிரவி அழகுபடுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்து விட்டது. இரண்டாம் கட்டமாக தரைக்கு புற்கற்றை பதித்து வேம்பு, மா, பலா போன்ற நிழல்தரு மரங்களை நாட்டி பொதுமக்கள் இருந்து இளைப்பாறுவதற்காக கொங்கிறீற் இருக்கை அமைப்பதுடன் அப்பகுதிக்கு மின் வெளிச்சம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் கோட்டைக்கும் பண்ணை கடற்கரைக்கும் இடைப்பட்ட பகுதியில் பண்ணைச் சந்தியிலிருந்து மாநகர சபை காணி வரையுள்ள பகுதியை நிரப்பி அப்பகுதியில் மக்கள் இருந்து இளைப்பாறவும் மாலைப் பொழுதை மகிழ்ச்சியுடன் கழிக்கவும் வசதியாக கொங்கிறீற் இருக்கைகளை அமைக்கவும், மின் வெளிச்சம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், நகரின் மத்தியிலுள்ள முக்கிய குளங்களான புல்லுக்குளம், வண்ணான்குளம், ஆரியகுளம், கன்னாதிட்டிக் குளம், தேவரிக் குளம் ஆகியவற்றைத் தூர்வாரி அழகுபடுத்தவும் அவற்றை அண்டியுள்ள கால்வாய்களை துப்புரவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டதுடன், புல்லுக்குளத்திற்கும் பழைய றீகல் திரையரங்கிற்கும் இடையேயுள்ள மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் தனியார் தொலைதூர பேருந்து நிலையத்தை அமைப்பதெனவும், அப்பகுதியில் நீண்டநேரமாகத் தரித்து நிற்கும் பேருந்துகளை நிறுத்தி வைக்க இடப்பற்றாக்குறை நிலவுவதால் தற்பொழுது கள்ளுத் தவறணை இயங்கும் பகுதி, வற்றாக்குளத்துடன் அண்டிய சில பகுதிகளை உள்வாங்கி அப்பகுதியில் தனியார் பேருந்து நிலைய யத்துடன் கடைத்தொகுதி ஒன்று அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உத்தியோகப்பற்றற்ற பேச்சை நட்பு நாடுகளுடன் நடத்த முடிவு?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கலந்து கொண்டுள்ள நட்பு நாடுகளுடன் இலங்கைப் பிரதிநிதிகள் உத்தியோகப்பற்றற்ற ரீதியில் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.


அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க முனைப்புக்கள் குறித்து உறுப்பு நாடுகளுக்கு விளக்கமளிக்கப் படவுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளினால் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை முறியடிப்பதற்காக உறுப்பு நாடுகளுடன் இலங்கைப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்ற முயற்சிக்கப்படும் தீர்மானம் நல்லிணக்க முனைப்புக்களை பாதிக்கும் என உறுப்பு நாடுகளுக்கு விளக்கமளிக்கும் நோக்கில் இந்த உத்தியோகப் பற்றற்ற பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன.

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஆதரவளிக்காது பாகிஸ்தான்

(ஜெனிவா)



இலங்கைக்கு எதிரான எந்தவொரு தீர்மானத்திற்கும் ஆதரவளிக்கப்பட மாட்டாது என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யக் கூடிய எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் நிறைவேற்றும் முயற்சி குறித்து பாகிஸ்தான் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றினால் அது பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக யுத்தத்தின் பின்னர் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முனைப்புக்களை, இத்தகைய தீர்மானம் பாதிக்கும் என சுட்டிக் காட்டியுள்ளது.

# யாழ். மன்னார் சேவைக் கட்டணம் தனியார் பேருந்து சங்கத்தால் அறிவிப்பு

மன்னாரில் இருந்து சங்குபிட்டி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு தனியார் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் கீழ் குறித்த அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தமது பயணங்களை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

தற்போழுது எரிபொருட்களின் விலை அதிகரிப்பினால் பேருந்து கட்டணத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் தனியார் பேருந்துகளில் மன்னார் சங்குபிட்டி ஊடாக யாழ்ப்பாணம் செல்லுவதற்கு 198 ரூபா அறவிடப்படும். இது தொடர்பான கட்டண விபரம் இவ்வழிச்சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

எனவே பயணங்களின் போது பயணிகளிடம் கூடிய பணம் அறவிட்டால் அல்லது ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் கீழ் குறித்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் பயணிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அலுவலக தொலைபேசி இலக்கம் :- 023223344, தலைவர் - 077706170, செயலாளர் - 077370277

# வெள்ளை மண்ணுக்கு அறவிடப்படுகிறது வரி

பூநகரிப் பகுதியைச் சேர்ந்த கௌதாரிமுனை மண்ணித்தலை பகுதிகளில் இருந்து தினமும் கொண்டு வரப்படும் வெள்ளை மண்ணுக்கு பூநகரி பிரதேச சபையால் வரி அறவிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச சபைத் தலைவர் பொ.சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

தினசரி நூற்றுக்கு மேற்பட்ட கனரக வாகனங்களில் காலை தொடக்கம் மாலை வரை யாழ். மாவட்டத்திற்கு கேரதீவு பாதையூடாக கொண்டுவரப்படுகிறது. ஒரு கனரக வாகன மண்ணுக்கு 100 ரூபா வீதம் பிரதேச சபையால் வரி அறவிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறிய தொகை எனவும் சபையின் தீர்மானத்தோடு மேலும் இத்தொகையை அறிவிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (112)

# கிளிநொச்சி பொதுநூலக செயற்பாடுகளில் அதிருப்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழுள்ள கிளிநொச்சி பொது நூலகத்தின் செயற்பாடுகள் திருப்தியளிக்கும் வகையில் காணப்படவில்லையென பொது மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

கிளிநொச்சி நகருக்கு மிக அண்மையில் அமைந்துள்ள இந்த நூலகம் மாவட்டத்தின் ஒரேயொரு பெரிய நூலகமாகவும் காணப்படுகின்றது. இதனால் இங்குள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த நூலகத்தையே தமது அறிவுப் பசிக்கு பயன்படுத்த வேண்டிய தேவைப்பாடும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த நூலகத்தில் பத்திரிகைப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் இடவசதி இல்லாததால் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக இயங்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்வின் பின்னர் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இந்த நூலகம் இயங்கி வந்தது.

ஆனால் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தை சர்வதேச விளையாட்டு மைதானமாக மாற்றியமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதால் அவ்விடத்திலிருந்து நூலகத்துக்குரிய பொருட்கள் அகற்றப்பட்டு தற்பொழுது கரைச்சிப் பிரதேச சபையின் பின்புறமாகவுள்ள சிறிய கட்டடத்தில் இடவசதிகளற்ற நிலையில் இயங்கி வருவது குறிப்பிடத் தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இத்தகையதொரு நூலகம் முழுமையாக இயங்குவதற்கு உரிய இடமின்றி முடங்கிக் கிடப்பது தொடர்பாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து மீண்டும் நூலகத்தை சகல வசதிகளுடன் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில்...

நகர் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள், கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் கீழே விழ அவர் மீது லொறியின் சில்லு ஏறியதனால் குறித்த இளைஞர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், லொறியின் சாரதி கிளிநொச்சி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், லொறியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (கே)

## மாணவியை...

ஒன்றினைப் பதிவுசெய்ததுடன் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்திற்கும் இவ்விடயத்தினை தெரியப்படுத்தியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

மேலும் இவ்விடயத்தை கோப்பாய் பொலிஸாரிடமே விசாரணை மேற்கொள்ளுமாறு மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயம் தெரிவித்திருப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (பா)

## தனிப்பட்ட தகராறு...

படைவீரரில் ஒருவர் ஏனைய இரு படைவீரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தன்னைத்தானே சுட்டுக் கொன்றுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவருவதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். சாவகச்சேரி பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இராணுவ வீரர்கள் உயிரிழந்ததை அடுத்து நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலைய அதிகாரி லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

இம் மூன்று இராணுவ வீரர்களுக்கிடையில் இடம்பெற்ற தனிப்பட்ட தகராறு காரணமாகவே இராணுவ வீரர் ஒருவர் ஏனைய இருவரையும் சுட்டுக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே இது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் இது ஒரு தீவிரவாத செயல் அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தோல்வியடைந்த...

இலங்கையை தோல்வியடைந்த நாடாக பிரித்தானியா ஒருபோதும் அடையாளப்படுத்தவில்லை.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியினால் இலங்கை ஆட்சி செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா. மனித....

உரிமைப் பேரவையில் விவாதம் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் தொடர்பில் எதிர்வரும் மே மாதம் நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி, சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கத் திட்டமிட்டுள்ளது.

## இலங்கையின் இறையாண்மையில்...

இராஜதந்திரிகள் என பலரும் கலந்து கொண்டனர். இலங்கை தரப்பில் மொகான் பீரிஸ் கலந்து கொண்டிருந்தார். சபையில் சமர்பிக்கப்பட்ட பிரேரணை குறித்த கருத்துக்களை அமெரிக்காக கேட்டறிந்து கொண்டது.


இந்த உப மாநாட்டில் பங்கெடுத்திருந்த நாடுகளில் பிரித்தானியா, அயர்லாந்து பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, நோர்வே, டென்மார்க், சுவீடன், அவுஸ்ரேலியா, ஒஸ்றியா, ஹங்கேரி, போலந்து, போர்துக்கல் மற்றும் கனடா, ஆகிய நாடுகள் அமெரிக்காவின் பிரேரணைக்கு தங்களின் ஆதரவினை தெரிவித்திருந்தன.

பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா, சீனா, எகிப்து, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், அல்ஜீரியா, இந்தோனேஷியா, சிம்பாவே ஆகிய நாடுகள் எதிர்பினை தெரிவித்திருந்தன. இந்த நாடுகளில் கனடா மற்றும் சிம்பாவே ஆகியன ஐ.நா. மனித உரிமைச் சபையில் தற்போது அங்கத்துவம் வகிக்கவில்லை.

எனினும் இந்தக் கருத்தறியும் மாநாட்டில் இந்தியா எந்தவித கருத்தினையும் தெரிவிக்காது மௌனத்தை கடைப்பிடித்தது. சில நாடுகள், இவ்விவகாரத்தை இலங்கையே பார்த்துக் கொள்ளும் என கூறியிருந்தன. இந்த பிரேரணையை கொண்டு வருவதற்கு பொருத்தமான தருணம் இதுவல்லவென அமெரிக்காவின் பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்த நாடுகள், தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் இலங்கையின் இறையாண்மைக்குள் தலையிடும் செயலாகவே இந்தப் பிரேரணை இருப்பதாக இலங்கையின் பிரதிநிதி மொகான் பீரிஸ் கருத்து தெரிவித்ததோடு, இலங்கையே தனது உள்நாட்டு விவகாரத்தை கையாண்டு கொள்ளும் எனவும் வலியுறுத்தியிருந்தார்.

# கலாசார நிலைய நிர்மாணம் குறித்த காட்சிவிளக்க நிகழ்வு இடம்பெற்றது





(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதியுதவியுடன், யாழ். நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள கலாசார நிலையம் தொடர்பான காட்சி விளக்க நிகழ்வு நேற்று மாலை யாழ். நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி:ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டனர்.

900 மில்லியன் ரூபா செலவில், யாழ். பொது நூலகத்திற்கு அருகாமையில் அமைக்கப்படவுள்ள இந்த கலாசார நிலையத்திற்கான கட்டட வரைப் போட்டியொன்றை நாடளாவிய ரீதியில், யாழ். மாநகரசபையும், இலங்கைக்கான இந்தியத் தூதரகமும் இணைந்து நடத்தியிருந்தன. இந்தப் போட்டிக்கு 29 வரைபடங்கள் கிடைத்தன. இவை மூன்று சுற்றுக்களாகத் தெரிவுசெய்யப்பட்டு இறுதியில் 5 கட்டட வரைபடங்கள் தெரிவுசெய்யப்பட்டன. இறுதியில் முதலிடத்தைக் கட்டடப் பொறியியலாளர் மதுரா பிரேமதிலக்கவின் வரைபடமே பிடித்தது. இருவருக்கு இந்தியத் தூதரகம் 7500 அமெரிக்க டொலர்களை பரிசாக வழங்கியது. அத்துடன் இவரது வரைபடத்தின் காட்சி விளக்கமும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் சந்திரசிறி உட்பட பல்வேறு தரப்பினரும் கட்டட நிர்மாணம் தொடர்பில் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் எஸ். மகாலிங்கம், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, உட்பட துறை சார்ந்த அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# 23 படகுப் பயணிகளுக்கு அவுஸ்ரேலியாவில் புகலிடம்

(சிட்னி)

23 இலங்கைப் படகுப் பயணிகளுக்கு புகலிடம் வழங்க அவுஸ்ரேலிய அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

2009 ஆம் புகலிடம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அவுஸ்ரேலியா நோக்கிப் பயணம் செய்த இலங்கை அகதிகள் இந்தோனேஷியாவில் தடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் படகில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணம் செய்திருந்தனர்.

அப்போதைய பிரதமர் கெவின் ரூட்டின் வேண்டுகோளுக்கு இணங்க சிலருக்கு அவுஸ்ரேலிய அரசாங்கம் புகலிடம் வழங்கி வருகின்றது.

படகுப் பயணிகளில் நூற்றுக் கணக்கானவர்களுக்கு இன்னமும் புகலிடம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்ரேலியாவில் வருடமொன்றுக்கு 13750 பேருக்கு புகலிடம் வழங்கப்படுகின்றது.

படகு மூலம் புகலிடம் கோருவோருக்கு அதிகளவான சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# குடும்பக் கட்டுப்பாட்டு ஊசியேற்றிய ஒரு பிள்ளையின் தாயார் உயிரிழப்பு



குடும்ப கட்டுப்பாட்டு ஊசி ஏற்றிய 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயொருவர் ஊசி ஏற்றி சில நிமிடங்களிலேயே உயிரிழந்த சம்பவம் ஒன்று கண்டி, ரம்புகேவெல என்னுமிடத்தில் இடம்பெற்றுள்ளது.

கண்டி, ரம்புக்கேவெல பிரதேசத்தை சேர்ந்த இனோகா ரூபசிங்க என்ற 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான இப்பெண் நேற்று முன்தினம் ரம்புக்கேவெல சுகாதார நிலையத்திற்கு சென்று குடும்பக் கட்டுப்பாட்டு ஊசி ஏற்றியுள்ளதுடன் இவ்வூசியை ஏற்றி சில நிமிடங்களில் மயக்கமடைந்துள்ளார்.

எனினும் வைத்தியசாலையில் அனுமதிக்க முன் அவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் சம்பந்தமாக அங்கும்புரை பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

இதேவேளை அவரது குடும்பத்தினர் இச்சம்பவம் சம்மந்தமாக கடும் எதிர்ப்பை தெரிவிப்பதுடன் ஊசி விசமானதாலேயே இம் மரணம் எற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# இலஞ்சம் பெற்றவேளை சிக்கினார் பொலிஸ் அதிகாரி

(கொழும்பு)

நுகேகொடை பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் இலஞ்சம் பெற முற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச, ஊழல் விசாரணைக்குழு தெரிவிக்கின்றது.

20 இலட்ச ரூபாவை இலஞ்சமாகக் கோரி அதில் 10 இலட்ச ரூபாவை முற்பணமாக பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்திலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது

# மக்களுக்கு தெளிவூட்டல்

(கொழும்பு)

நாட்டிற்கு எதிராக ஜெனிவாவில் இடம்பெற்று வரும் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், மக்களுக்கு தெளிவூட்டும் வேலைத் திட்டம் ஒன்றினை தாம் ஆரம்பித்திருப்பதாக தேசிய சுதந்திர முன்னணி, தெரிவித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னதாக முன்னணியின் உறுப்பினர்களால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைத்த, அமைச்சர் விமல் வீரவன்ச, மக்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கையினை தமது கட்சி தொடர்ந்தும் முன்னெடுக்கும் என் குறிப்பிட்டார்.

# ரம்புக்வெல்ல, துமிந்தவிற்கு மூன்றுமாத விடுமுறை

(கொழும்பு)

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா ஆகியோருக்கு மூன்று மாதகாலத திற்கு நாடாளுமன்ற கூட்டத்தொடர்களில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், வெகுசன ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிற்கு எதிர்வரும் 22 ஆம் திகதி முதலும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி முதலும் மூன்று மாதகாலத்திற்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான பிரேரணையை சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

# பாணுக்குள் போதைப்பொருள் வவுனியா பெண் கைதானார்



(கொழும்பு)

பாண் துண்டுகளுக்கிடையில் ரஸ்க் வகைப் போதைப் பொருளை மறைத்து வைத்து அவற்றை அநுராதபுரம் சிறைச் சாலைக்குள் கொண்டு செல்ல முயற்சித்த வவுனியா பிரதேச பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேற்படி பாண் துண்டுகளை இரண்டாக உடைத்து அவற்றுக்கிடையில் போதைப்பொருளை வைத்து விட்டு மீண்டும் அப்பாண் துண்டுகளை பசையினால் ஒட்டிய நிலையிலேயே இந்த போதைப் பொருள் கடத்தல் இடம்பெறவிருந்ததாக வவுனியா பொலிஸின் குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்தது.

மேற்படி பாணைக் கொண்டு செல்லும்போது சந்தேகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அவற்றுடன் பழங்களையும் சிறைச்சாலைக்குள் கொண்டு செல்ல முயற்சித்திருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டனர். மேற்படி பெண் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலை அடுத்து அவர், வவுனியாவிலிருந்து அநுராதபுரம் நோக்கி பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தபோது கைது செய்ததாக கூறிய பொலிஸார், குறித்த பெண்ணிடம் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

# மாணவிகள் மீது துஷ்பிரயோகம் மாட்டிக்கொண்டார் அதிபர்



(கொழும்பு)

தனது பாடசாலை மாணவிகளுக்கு ஆபாசப் படங்களைக் காட்டியதுடன் அந்த மாணவிகளில் இருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் குறித்த பாடசாலையின் அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இந்த மாணவிகளுக்குப் பாடசாலையிலேயே வைத்து ஆபாசக் காட்சிகளைக் காண்பித்துள்ளார். இச சம்பவம் உடுதும்பற - கட்டுகஸ்ஓயா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. 14 மற்றும் 15 வயதான மாணவிகள் மீதே இவர் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

# லின்டென் மருந்தினைப் பயன்படுத்தத் தடை

(கொழும்பு)

பேன்களை அழிப்பதற்காக பயன்படுத்தப்படும் லின்டென் எனும் மருந்துப் பொருளினை இலங்கையில் பயன்படுத்துவதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த தடையை அழகு சாதனங்கள் மற்றும் மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகாரசபை விதித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மருந்துப் பொருளினை தொடர்ச்சியாக உபயோகிப்பதன் மூலம் பாவனையாளர்கள் பாரியளவான பக்கவிளைவுகளிற்கு உட்படுவதன் காரணமாக தடைவிதித்ததாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# தரக்குறைவான பெற்றோல் ஏற்றுமதிசெய்ய நடவடிக்கை



சர்ச்சைக்குரிய தரக்குறைவான பெற்றோலின் 2600 மெற்றிக்தொன் பெற்றோலை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெற்றோல் தொடர்பில ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையிலுள்ள சிபாரிசுகளுக்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய தொழிற்துறை அமைச்சு தெரிவித்தது.

உலக சந்தையில் தற்போதுள்ள விலைகளின் பிரகாரம் இந்த பெற்றோல் விலைமனு கோரலின் அடிப்படையில் கொள்வனவாளர்களுக்கு விற்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

இந்தப் பெற்றோல் தொகையை கொள்வனவு செய்த விலையைவிட அதிக விலைக்கு விற்பனை செய்ய முடிந்துள்ளதாகவும் இதன் மூலம் பெற்றோலிய கூட்டுத்தாபனம் எதிர்நோக்கியுள்ளதான நட்டத்தை முழுமையாக ஈடுசெய்ய முடிந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவிக்கின்றது.

இதேவேளை சர்ச்சைக்குரிய இந்த பெற்றோலைப் பயன்படுத்தியதால் பழுதடைந்த வாகனங்களுக்காக இழப்பீடு செலுத்துவதற்கு விநியோக நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளதாக பெற்றோலிய தொழிற்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.